பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணு ; வெளி நாடு 1½ அணு

# குடி அரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு தை மீ 30உ (12—2—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 42

இனும்! இனும்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக்கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பேனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனவும் இனும்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.

விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட். ஜி. டி மதராஸ்.

## என். தண்டபாணி Co.

நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கத்தர் துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் நயமாயும் நல்லதாயும் கிடைக்கும்.

தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக் கொள்ளப்படும்).

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ. 100-க்கு 25 வீதம் முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:— என். தண்டபாணி பிள்ளை,
தபாற் பெட்டி 292, சைனபஜார், செ. 292
மதராஸ்,

ஆங்கிலத்திலும் தமிழிலும் மாதம் இருமுறை வெளிவரும் ஓர்சிறந்த

## ஆதிதிராவிட காவலன்

என்னும் பத்திரிகையை ஆதரியுங்கள்.

உள்நாடு வருட சந்தா ரூ. 2 } தனிப்பிரதி
வெளிநாடு ,, ரூ. } ஒரு அணு.

முன்பணம் அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரத்திற்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஆர். வீரையன்,
பத்திராதிபர்,
ஆதிதிராவிட காவலன்'
கோயமுத்தூர்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனான்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசுந்தர புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அது எப்படி நிலை பெயர்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் காணுமும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்திலும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

**வாஸன் புஸ்தகசாலை,**

**தபாற்பெட்டி நெ. 119**

**97. அன்னபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.**

# தாங்களும் கொடார்கள் பிறரையும் கொடுக்க விடார்கள்.

கைவல்ய சரமியா எழுதுவது

"ஆதிதிராவிடர்களுக்கு 150 வருடமாக வெள்ளைக்காரர்கள் யாதொரு நன்மையும் செய்யவில்லை இனியும் செய்ய மாட்டார்கள். காங்கிரசே நன்மை செய்யும்" என்று காங்கிரஸ் முக்கியஸ்தரான ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி அய்யர், "சுதேசமித்திரன்," இவர்கள் சொல்லுகிறார்கள். மனமறிந்த வஞ்சனைக்குப் பரிகாரமில்லை. தான் செய்யும் புண்ணிய பாவத்திற்கு உடனே பலன் வந்தாலும் வராவிட்டாலும் தான் அபிமானித்து விர்த்தியாக வேண்டுமென்று வளர்க்கப்பட்ட சாதனமனைத்தையும் அப்பாவம் சூழ்ந்து கொள்ளுவதுமல்லாமல் தான் செய்தாலும் தன்னைத் தொடருமென்பதை நம்பினவனே இந்து. "ஓரம் சொன்னார் மனையில் வேதாளம் புகும், வெள்ளெருக்குப் பூக்கும், பாதாள மூலி படரும்" என்றார் ஔவை. "மரமுமிருந்தும் இலையுதிர்ந்தது ஓரம் சொன்னார் மனையைப் போல்" என்றார் ராமர். ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை நாம் செய்த கொடுமை போதும். இப்பொழுதே நமது குழந்தைகள் எவ்வாறு பிழைக்கப் போகிறார்கள் என்கிற கவலையே நாம் வைத்துப் போகும் ஆஸ்தியாக இருக்கிறது. இனியும் நம் நாட்டிற்கு பாவத்தைத தேடிவைக்க வேண்டாம்! பெல்ஜியக்காரர் நீக்ரோக்களைத் துன்புறுத்தின பாவத்தின் பலனை ஜெர்மனியால் அனுபவிக்கிறார்கள் என்று யுத்தசமயம் அமெரிக்காவிலிருந்து ஒரு நீக்ரோ எழுதினதைப் படித்திருப்பீர்கள். நாம் செய்த கொடுமைக்கு நாம் அனுபவிக்கும் பாவமே நம்முன் நிற்கிறது. எவ்வளவு பூசை, நைவேத்தியம், ஆசார அனுஷ்டானங்கள் பண்ணினாலும் நாம் கும்பிடும் தெய்வம் நம்மை எரெடுத்துப் பார்ப்பதில்லை. அத்தெய்வங்களனைத்தும் தாங்களும் வளர்ந்து பிறரையும் வளரவிடும்புண்ணியவான்களிடம் புகுந்துகொண்டன.

"ஆதிதிராவிடர்களுக்கு வெள்ளைக்காரர்கள் உதவி செய்யமாட்டார்கள். காங்கிரஸ் உதவி செய்யும்" என்று சொல்லுவதானது அனுபோகத்திற்கு நேர் விரோதம். காங்கிரஸ் என்பது வரங்கொடுப்பதற்கு தெய்வமுமன்று, தேவனுமன்று. ராஜ்ஜிய வாதிகளின் சபை அதில் சேர்ந்தவர்களே, நன்மை தீமையைக் கொடுப்பவர்கள் மகாத்மா காந்தியவர்கள் காங்கிரசைப்பற்றி அபிப்பிராயம் கொடுப்பதற்கு முதன்மையானவர் என்பதை காங்கிரஸ் காரர்களே ஒத்துக் கொண்டார்கள். அவரே "காங்கிரசை பொறுப்பற்ற விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டம்; அக்கூட்டத்தின் தீர்மானங்களைக் கண்டு உலகத்தார் நகைக்கிறார்கள். படித்த பத்துப்பேரின் அபிப்பிராயமே தேச முழுவதுமுள்ள அபிப்பிராய மாகிவிடுமா" என்று சொல்லுகையில் காங்கிரசில் ஞாயமில்லாத் தன்மை இருந்தே இருக்க வேண்டும். அதிருக்கட்டும். நாமே கவனிப்போம். 42 வருடமாக ஆதிதிராவிடர்களுக்கு வந்த நன்மை என்ன? மகாத்மா காந்தியால் காங்கிரசில் உண்டான தீண்டாமை போக்கும் தீர்மானத்திற்கு யாதொரு நன்மையும் காங்கிரஸ் செய்யாமல் இந்த வருடம் அதைக் காங்கிரசிலிருந்து அறவே எடுத்துவிட்டது மல்லாமல் முதலியார் அவர்கள் உபசரணைக் கமிட்டித் தலைமையில் செய்த பிரசங்கம் தீண்டாமை என்றும் நிலை நிற்கவும் மற்றெல்லா ஜாதிகளும் பாப்பானுடைய வருணாசிரம தர்மத்திற்கு அடங்கி இருக்க வேண்டுமென்றல்லவா இருக்கிறது.

நம்முடைய அரசியல் அமைப்பில் முக்கியமான அம்சமாக இருக்கும்படி பிரஜா உரிமை சாஸனம் ஒன்று செய்யப்பட வேண்டியது அவசியமென்பதை வற்புறுத்த வந்ததாகப் பேசினவிடத்தில் பொதுஜன அமைதிக்கும் சமூக தர்மத்திற்கும் குந்தகமில்லாமல் விருப்பம்போல் அவருடைய செய்கைகளையும் அபிப்பிராயங்களையும் கௌரவத்துடன் மதிப்பதற்கும் அவைகளுக்கு யாதொரு பாதகமும் ஏற்படாமல் தடுப்பதற்கும் தேசத்தின் அடிப்படையான சட்டங்களைக் கொண்டு தகுந்த பாதுகாப்புகள் ஏற்படும்படி செய்யவேண்டும்" என்ற இந்த வாக்கியத்தின் மாய மந்திரம் வேப்பிலையைக் கையிலெடுத்த இடத்திலெல்லாம் அடிக்கலாம். இந்த இடத்தில்தான் யெல்லாரையும் மட்டப்படுத்தும் எமன் காங்கிரசு என்கிறது "குடி அரசு". பொதுஜன அமைதிக்கும் சமூக தர்மத்திற்கும் குந்தகமில்லாமல் எந்த ஜன சமூகத்திற்கு நன்மை செய்ய முடியும்? எதைச் சீர்திருத்தலாம்? பொது ரஸ்தாவில் ஒருவன் போனால்கூட பொதுஜன அமைதிக்கு விரோதமென்று சில பாப்பானும் அவனால் ஏவப்பட்ட சிலரும் சொன்னால் பொதுஜன அமைதிககு பாதகம் தானே! என்னைத் "தாசிமகன், ஒழுக்கம் கெட்டவன், அடிமை என்று சொல்லாதே" என்று கேட்டால் அது சமூக தர்மத்திற்கு விரோதமென்றல்லவா சட்டம் செய்யச் சொல்லுகிறது காங்கிரஸ். இந்த நிலைமையில் வருணாசிரமக் கொடுமையை வற்புறுத்த வந்திருக்கும் காங்கிரசால் ஆதிதிராவிடர்களுக்கு என்ன நன்மை வந்துவிடும்? உத்தியோகத்தை உண்டாக்கும் காங்கிரசிலிருந்து அடைந்த உத்தியோகத்தில் ஒன்றாவது இவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா? சுயராஜ்ஜியம் காங்கிரஸ் அடைந்துவிட்டாலும் ஆதிதிராவிடர்கள் விஷயத்தில் சுயராஜ்ஜியத்தோடு விளங்கும் தேசங்கள் நடக்கும் பான்மையைப் பார்த்தால் காங்கிரசை நம்புவது எப்படி? திருவனந்தபுர ராஜ்ஜியம் மனித ராஜ்ஜியமல்லாமல் மகாவிஷ்ணுவின் ராஜ்ஜியமாம். தெய்வ ராஜ்யத்திலேயே வீதியில் போக உரிமையில்லாதிருக்கையில் வைதிக ராஜ்ஜியத்தில் உரிமை எப்படி உண்டாகும்?

ஆதிதிராவிடர்களுக்கு வெள்ளைக்காரர்களால் உண்டான நன்மைகளைக் கவனிப்போம். இவை அனைத்தும் பிரத்தியட்சத்தில் இருப்பதால் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. பறையர் என்று சொல்லுவதை விட்டு விட்டுக் காங்கிரஸ் மேதாவிகள் ஆதிதிராவிடர்கள் என்று சொல்லுவதே பெரும் நன்மை. தாங்களும் மனிதர்கள்தான் எல்லாருக்குமுள்ள உரிமை நமக்குமுண்டு என்கிற எண்ணம் வந்து அவர்களும் சண்டைக்கு நிற்பது வெள்ளைக்கார அரசாட்சியில் உண்டானதா அல்லவா? ஆதிதிராவிடர்கள் உண்பது, உடுத்துவது, அவர் தயவிற்கு உயர்ந்த ஜாதியார் பங்களாவைச் சுற்றி சலாம் போடுவது, அநேக குடும்பங்கள் வயிறு நிறையச் சாப்பிடுவது, இவர்களுடன் சட்ட சபையிலும், ராஜாங்க சபையிலும் உட்கார்ந்திருப்பது. ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு, முனிசிபாலிட்டி இவைகளில் ஜமீன்தார், மிராஸ்தார், வியாபாரிகள், வருணாசிரமக்காரர்கள் இவர்களுடன் சரிசமனாக உட்கார்ந்திருப்பது, அவர்களுடன் சமத்துவமாக வார்த்தையாடுவது, இவர்கள் ஓட்டுகளைப் பெற நேசிப்பது, இத்தனையும் வெள்ளைக்கார நீதியாலல்லவா உண்டாயிற்று! இவர்களுக்கு மோர், பால் கொடுத்தால் நமக்குப் பாவம் வந்துவிடும். இதனால் இவர்கள் பால், மோர் காண்பதே அபூர்வமாகும். வெள்ளைக்காரர்களுக்கு நாம் கொடுக்கும் பாலை எல்லாம் ஆடையாக்கி அதில் அநேகவித பழ வர்க்கம் கலந்து பனிக்கட்டியில் வைத்து உண்பதுவும், வெள்ளைக்காரர்கள் விருந்தில் டர்க்கி என்னும் வான்கோழி மாம்சமும், சாம்பீன் என்னும் உயர்ந்த சாராயத்தையும் குடித்து ஜனவரிமாத முதற்கொண்டு இறைந்து கிடக்கும் ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, சாத்துக்குடி, அத்தி முதலிய பழவகைகளைச் சாப்பிட்டு ஆனந்தப் படுவது முத்துரங்க முதலியார் அவர்களினாலா வெள்ளைக்காரர்களினாலா? முழங்காலிற்கு மேல் வேஷ்டி கட்ட வேண்டும், பொட்டிடப் படாது, குடை பிடிக்கப் படாது' விசேட பதார்த்தம் வீட்டில் செய்யப் படாது, யாரைக் கண்டாலும் சுவாமியென்று கும்பிட வேண்டும் என்ற இத்தனை நிர்ப்பந்தமும் இப்பொழுதுதானே குறைந்து வருகிறது. சுதேசிய ராச்சியத்தில்கூட சம உரிமைக்குச் சண்டை போடுகிறார்களே. இது யாருடைய தைரியம்? வெள்ளைக்கார நீதி தலைக்குமேல் ஆடாவிட்டால் அங்கு சங்கம் கூட முடியுமா, உரிமை கேட்க முடியுமா, பட்டணம் பீச் ரோட் பெண்கள் ஹைஸ்கூலில் சில ஆதிதிராவிடப் பெண்கள் சமஸ்கிருதம் படித்து வருகிறார்களே, இவை யாருடைய தயவால்? மிஸ். மேயோ எழுதின புஸ்தகம் இந்தியா தேசத்திற்கு அவமானத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் இந்தியாவில் இந்த சமூகத்தை துன்பப் படுத்துவது உலகமெல்லாம் தெரிய காரணமாக விருப்பதும் அந்த புஸ்தகம் தானே, சாஸ்திரம் படித்தவர்களும், செல்வவான்களும், உயர்ந்த ஜாதியார்களும் ஏழையிலும் ஏழையான இவர்களை வீதியில் வரவிடாமல் விரட்டியடித்து, வயிற்றுக்கு ஆகாரம் கொடுத்தால் பாவம் வந்துவிடுமென்று வெட்டி வேலையும் வாங்கி வயிற்றுப் பசியால் வேலைசெய்யச் சக்தியற்று, தேகம் சோர்ந்த சமயம் ஏதாவது நம் உத்திரவிற்குப் பதில் சொல்லி விட்டால் அவனுக்குக் கொடுக்க வேண்டிய தேகதெண்டனையெல்லா கொடுத்து, அநேக நாளுக்கு பசியாய்க் கிடப்பதற்கு உத்திரவும் போட்டுவிடுகிறோம். உயர்ந்த ஜாதிக்காரர் வீட்டில் இவர்கட்குச் சாப்பாடு போட்டால் பாவம் வந்துவிடும், தண்ணீர் கொடுத்தால் நரகம் வந்துவிடும், வீட்டிலும தண்ணீர் கொடுப்பதில்லை, குளம் கிணறு தொடப்படாது (நதிகள் எல்லா ஊரிலுமில்லை) நதி இருக்கும் படித்துறைக்குப் போனால படித்துறையில் எப்பொழுதும் ஆளிருந்துகொண்டு துரத்திக் கொண்டிருக்கும். படித்துறைக்கு அரை பர்லாங்கு எந்தப் பக்கமாவது போய் தண்ணீர் குடித்து வருவதற்குள் நாளோ பாதியாகும். எஜமான் கோபம் வந்தாலும் வரும். அநேகர் எவ்வளவு தண்ணீர்த் தாகமாக விருந்தாலுந் தங்கள் குடிசைக்கே போய்விடுவார்கள். சித்திரை பங்குனி மாதமானால் அநேக சமயம் குடிசையில்கூட தண்ணீரிருக்காது. இந்தப் பாவம்தான் நம் பூமியிலுள்ள பயிர்கள் ஒரு மழையில்லாமல் முளையிலும் பொடையிலும் வாடி வதங்கச் செய்து நம் அடிவயிற்றைப் பிசையச் செய்வது, இந்த நிலைமையிலிருக்கும் ஆதிதிராவிடர்கள் சிலர் தயவிற்கு யாரும் தெரியாமல அவன் குடிசை சென்று அதை இதைத் தருகிறேன் என்று கெஞ்சுவதும், பங்களாவைச் சுற்றியிருக்கும் போலி காங்கிரஸ்காரர்களுக்குச் சோடா, காப்பி கொடுத்துப் பசியாற்றுவதும் வந்தது வெள்ளைக்காரர்களினாலல்லவா?

தற்கால கல்வியில் எவ்வளவோ தேர்ந்தவர்களென்றும் இந்த உலகத்திற்கு நாங்களே நன்மை செய்கிறவர்கள் என்றும், எங்கள் சபையே பெரிதென்றும், பெருமை யடித்துக்கொண்ட போதிலும், காலால் அடிபட்டு வருந்தும் இந்த ஏழைகளுக்குக் கை கொடுத்து தூக்கிவிடும் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் கவலையே எடுக்கவில்லையே. அது மாத்திரமன்று. இந்த ஏழைகளை இன்னும் மிருகப் பிராயராக்கி அவர்களை முன்னிலும் அதிகமாக வருத்துவதற்குக் காங்கிரஸ்காரர்கள் ஈவு, இரக்கம், தயவு, தாக்ஷண்ணியமற்ற வருணாசிரமக்

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# "பிராமணாள்" காப்பி கிளப்

குமாரசாமி எழுதியது.

நண்பர்களே!

சென்ற வாரம், ஆலயப் பார்ப்பனரின் அக்கிரமங்களைப்பற்றி எழுதினேம்: அவைகளில் ஒவ்வொன்றையும் தென்னாட்டாரில் இந்துக்கள் என்பவர் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வார்களென்பதில் ஐயமில்லை. இவ்வாரம், கோவிலுக் கடுத்தபடியாக அவ்வளவு அக்கிரமங்களும் நிறைந்த மற்றொரு வகையான பொது ஸ்தலங்களைப் பற்றிக் கொஞ்சமெழுதக் "குடி அரசு" இடங்கொடுக்குமென்று நம்புகிறோம்.

கோவிலுக் கடுத்தபடியாக யாவரும் கூடுவது காப்பிக் கிளப்" பார்த்தவிடமெல்லாம் "பிராமணர் கிளப் கண்டவிட மெல்லாம் "காப்பிக் கிளப்" சருக்கிவிழுந்த விடமெல்லாம் ஒரு "சாப்பாட்டுக் கடை" எல்லாம் "பிராமணாள்" சர்வம் பார்ப்பனமயம்.

முதலாவது 'பிராமண' என்பது ஆரியச் சொல்' அதற்கு "கடவுளை அறிந்தவன்" என்பது பொருளாம். ஆம், காப்பிக்கடை வைத்திருக்கும் பார்ப்பனனும் கடவுளை அறிந்தவன்தான். ஆனதால் தான் மற்றவர்களும் கடவுளை அறிவதற்காகவும், அடைவதற்காகவும் எவ்வளவு சீக்கிரத்தில் பரலோகத்திற்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பக் கூடிய பலகார பக்ஷணங்களைத்தான் தயார் செய்து விற்கிறார்கள். பின்னர், "பிராமணன்" என்ற ஆரிய வார்த்தையோடு 'அர்' 'கள்' என்ற தமிழ் மரியாதைப் பன்மை விகுதிகள் வால்கள் சேர்ந்துண்டாகும் 'பிராமணர்கள்' என்ற வார்த்தையானது மருவி "பிராமணாள்" என்ற வார்த்தை உண்டாயிருக்கிறது. ஆகவே ஆரிய வார்த்தைகளுக்குங்கூட தமிழ் வார்த்தைகள் வால்களாக விளங்கும்போது ஆரியப் பார்ப்பனர்களுக்கு சில தமிழ் திராவிடர்கள் வால்களாகவும், வால் பிடித்துத் திரிபவர்களாகவும் விளங்குவதில் அதிசய மொன்றுமில்லை போலும்! மூன்றாவதாக காப்பிக் கிளப் என்ற ஆங்கில வார்த்தைகள் "காப்பிப் பானம் விற்கும் கூட்டம். போலிக் கூட்டம், நடிக்கும் கூட்டம்" என பலவிதப் பொருள் தருதல் போலவே இப்பார்ப்பனக் கூட்டத்தார் மதவிஷயத்திலும், சமூக விஷயத்திலும், ராஜீய விஷயத்திலும் நமக்கு குருக்களாகவும் பெரியோர்களாகவும் தலைவர்களாகவும் நடிக்கின்றனர்.

இக்காப்பிக் கடை சோற்றுக்கடைப் பார்ப்பனர்களின் யோக்கியதையைப் பொறுத்தமட்டும் இங்கு கொஞ்சம் ஆராய்வோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும், வக்கீல்களாகவும். லோக குருக்களாகவும், குடும்ப புரோகிதராகவும் ஊர்க் கோவில் அர்ச்சகராகவும் வர முடியாதவர்களோ அல்லது இவ்வளவு பதவியிலுள்ளவர்களுக்கும் கட்டுப்படாத ஏமாறாத தமிழர்களை, திராவிடர்களை, பாப்பனரல்லாதார் அனைவரையும் சட்டுப்படுத்தவும் ஏமாற்றவும் இக்காப்பிக்கடை பார்ப்பனர் பலகாரக்கடை பார்ப்பனர் சோற்றுக் கடை பார்ப்பனர் பிறந்தார்கள் போலும்,

பக்தியின் பேரால் கடவுளின் பேரால் பார்ப்பனருக்குச் செலுத்தும் காணிக்கையும், வேதத்தின் பேரால் புராணத்தின் பேரால் மதத்தின் பேரால் அவைகளைச் சேர்ந்த சடங்குகளின் பேரால் அவர்களுக்குக் கொடுக்கும் தக்ஷிணையும். விவகாரத்தின் பேரால் வழக்குகளின் பேரால் அவர்களுக்குக் கொடுக்கும் வக்கீல் பீசும், இவ்டத்தின் பேரால் இனமின் பேரால் உத்தியோக பார்ப்பனர்களுக்குக் கொடுக்கும் லஞ்சமும் சேர்ந்து காப்பிக்கடை பார்ப்பனருக்குக் கொடுக்கும் பணத்தில் நூற்றிலொரு பங்குகூட இருக்காது. பலகார பக்ஷணங்கள் என்னும் பரலோக மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டுப் பணம் கொடுப்பவர்களைப்பற்றி நமக்கு அவ்வளவு அக்கரையில்லை. ஆனால் அவ்வியாபாரத்திற்கு முதலீடு கொடுக்கும் மூலதனம் கொடுக்கும் பால்காரர்களையும் பலசரக்குக் கடைக்காரர்களையும்பற்றித்தான் அதிகம் கவலைப்பட வேண்டியவர்களாயும் எச்சரிக்கை செய்ய வேண்டியவர்களாயும் இருக்கிறோம்.

சில பால்காரர்கள் தங்களிடத்திலேயே பால் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வருஷக்கணக்காக பணம் வாங்காமல் பால் ஊற்றுவதுடன் நூற்றுக்கணக்காக ரூபாயும் கொடுத்து விடுகிறார்கள். காப்பிக்கடைப் பார்ப்பனர்கள் பாலும் பணமும் இந்த அப்பாவிகளிடம் பெற்றுக்கொண்டு இதைப் போலவே பலசரக்குக் கடைக்காரர்களிடமும் மாதத் தவணைக்கு காப்பிக்கொட்டை சர்க்கரை மாவு முதலிய சாமான்கள் பெற்றுக்கொண்டு வந்து கடைசியில் சுமார் ஒரு வருஷத்திற்கு பிறகு கிடைத்ததைச் சுற்றிக்கொண்டு கம்பிநீட்டி விடுகிறார்கள். பேராசையால் பாலூற்றினவர்கள், பணம் கொடுத்தவர்கள், பலசரக்கு கொடுத்தவர்கள், வெளியிற்சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு "தேள் கொட்டிய திருடர்களைப் போல்" பதைக்கிறார்கள். இது இத்துடனிருக்கட்டும். இனி இவர்களின் பலகார பக்ஷணங்களின் தன்மையும் காப்பியின் தன்மையும் கடையின் தன்மையும் எப்படி என்று கொஞ்சம் பார்க்கலாம்.

அடுப்பங்கரை அய்யர் குடிபுகுந்த அன்று சுண்ணும்படிக்கப் பட்டது. அய்யர் கம்பி நீட்டின பிறகுதான் மறுபடியும் கட்டிடத்தின் சொந்தக்காரரால் கவனிக்கப்படும். அப்படிக்கின்றி அய்யர் போன பிறகும் இன்னொரு அய்யர் பலகாரக்கடை வைக்க வந்து விட்டால் அவர்கூட சுண்ணும்படிக்க மாட்டார். அவ்வறைக்குள் புகுந்தால் நாற்புறத்திலும் கரிய சுவர்களும், மேலே ஒட்டடைத் தோரணங்கள் நிரம்பிய கூரையும், கீழே தண்ணியும் எண்ணெயும் கலந்த (காலோடு ஒட்டிக்கொள்ளும்) தரையும் முதலில் கவனத்தைக் கவரும். வெளிப்புறம் கரிப்பற்றும், உட்புறம் எண்ணெச் சிக்கும களிம்பும் பிடித்த பாத்திரங்களில் அரைத்த மாவும், இங்குமங்கும் ஓடும் எலிகளும், கக்கூஸ் பூச்சிகளும், ஜலதாரையண்டை சேற்றில் பொய்த்துக் கொண்டிருக்கும் புழுக்களும் ஈக்களும் கொசுக்களும் மற்றொரு காட்சி. இவைகளுக்கெல்லாம் படியளப்பவராய் அடுப்பங்கடையில் சாக்ஷாத் ஐயர். அய்யர் வெகு நாள், சென்ற வாரத்தில அர்ச்சகராய் விளங்கின அய்யருக்கு கொஞ்சமும் இளைத்தவரல்ல. கருத்த பெருத்த குறுகிய உருவம், சேற்றுப்புண் அல்லது ஆனைக்கால் பாதம், மேகத் தடிப்பு, தொங்கும் தொந்தி, குட்டத்தால் குறுகிய விரல்கள் ஆகிய அனைத்தும் உண்டு. இவைகளை யெல்லாம் ரத்து செய்து இவர் பிறவியிலேயே அய்யர், மனுஷ ஜன்மத்திலேயே உயர்ந்த பிறவியென்று சொல்லும் அய்யர் என்ற உறுதிசெய்ய பூணூலும் உண்டு. ஆகா! இந்த நூலின் மகிமையே மகிமை. இந்த நூலைக்கண்டால் கல்விமான் என்ன, செல்வவான் என்ன, பெரிய பெரிய மனிதர்களெல்லாம் கையெடுத்துத் தலைவணங்கிக் கும்பிடுகிறார்களென்றால் அதன் பெருமையை நாம் சொல்ல முடியுமோ! கூடுமானவரை கொஞ்சம் சொல்கிறேன். இவ்வய்யருடைய பூணூல் வியர்வை நீரை வழிக்கிறது. பலகாரமகட்ட இலை கிழிக்கிறது உடம்பு தேய்க்க உதவுகிறது அரைக்கு அரைஞாண் ஆகிறது. மற்ற சமயங்களில் சாவிக் கொத்தையும் தாங்கிக்கொண்டிருக்கிறது.

பக்ஷணம் செய்யப்படும் அறையும் பக்ஷணம் செய்யும் அய்யரும் இப்படியிருந்தால் பக்ஷணங்களைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. எண்ணெய் என்றால் எள்+நெய், எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய் என்று பண்டிதர்கள் இலக்கணம் சொல்லுகிறார்கள். பலகாரக்கடை அய்யர் பக்ஷணங்களுக்காக உபயோகிக்கும் எண்ணைக்கு எந்த பண்டிதரும் இலக்கணங்கூறமுடியாது வேனெணில்நெய், தேங்காய்நெய், நிலக்கடலை நெய், மண் நெய் (சீமை எண்ணை) கொழுப்பு நெய், ஆகிய ஆறும் எண்ணையே ஆகவே அய்யர் தயாரிக்கும் பக்ஷணங்கள் அறு சுவையும் பொருந்தியவை என்று சொல்வதில் கொஞ்சமும் பொய்யில்லை. தாளிப்புக்கு உபயோகப்படுத்தும் பதார்த்தங்களில் வெங்காயத் தோடு பாச்சையும், மிளகாயோடு கக்கூஸ் பூச்சிகளின் இரக்கைகளும, கடுகுமிளகு உளுத்தம் பருப்போடு எலிப் புளுக்கைகளும், காய்கறி மாவு வகையோடு செல்லுப் பூச்சிகளும்புழுக்களும கலந்திருப்பதால் இவைகளினுல் செய்யப்படும் பலகார பக்ஷணங்களின் ருசி நம் வீட்டில் செய்யும் பலகாரத்துக்கோ நம்மவர் விற்பனைக்குச் செய்யும் பலகாரத்துக்கோ அமைவதில்லை எனப்படுகிறது- காப்பித்தூளோடு சிகைக் காய்த் தூளும் புளியங்கொட்டைத் தூளும் சற்று சோடா உப்பும் சேர்ப்பதால் அய்யர் காப்பிக்குச் சமானமான காப்பி இந்த அண்டத்திலேயே கிடையாது எனப் படுகின்றது.

விற்காமல் நின்றுபோன முந்தின நாள் இட்லிகளை துண்டு துண்டாக அறுத்து மஞ்சள் பொடி தூவி தாளித்து "பம்பாய் இட்லி" என்று ஒரு நூதனப் பெயர் வைத்

இதன் தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்க.

# இதிகாசங்கள்.

திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது

## III

### இராமாயணம் பாலகாண்டம்.

தாசிப்பெண்களால் மயக்கி காட்டுக்கு அழைத்து வரப்பெற்ற கலைக்கோட்டு முனிவனை அயோத்திக்கு அழைத்து வந்த தசரதன் அசுவமேத யாகஞ்செய்யத் தொடங்கினான். யாகக்குதிரை நாடு சுற்ற அனுப்பப் பெற்றது. அரசர்களெல்லாரும் வந்து சேர்ந்தனர். அயோத்தியை யடுத்துள்ள சரயுநதியின் வடகரையில் யாகம் தொடங்கப்பெற்றது.

குதிரையை விட்டு ஓராண்டு நிரம்ப அக்குதிரையும் வந்து சேர்ந்தது. கலைக்கோட்டு முனிவன் தலைமை பூண்டு வேள்வியை நடத்தினான். யாகத்திற்கு நாற்புறத்தும் பிராமணர்கள் உட்கார்ந்து கொண்டு நன்றாய்ச் செழித்திருந்த சோம 'மென்னும் கொடியைக் கல்லெடுத்து நெருக்கி யாகஞ் செய்யவேண்டி அதிலிருந்து ரசத்தை நன்றாகப் பிழிந்தெடுத்தார்கள்

இருபத்தொரு யூபஸ்தம்பங்கள் நாட்டப்பட்டன. அவைகள் மிகவும் அலங்காரம் செய்யப்பெற்றன. அந்த யூபஸ்தம்பங்களில், அவ்வவ்வானவர்களைக் கருதிப் பசுக்களும் பாம்புகளும் பறவைகளும் நால்தவளுது கொண்டு வந்து கட்டப்பட்டன. அசுவமேத மென்னும் அச்சிறந்த யாகத்தில் விதிப்படி பசு ஹிம்சை செய்யவேண்டிய சமயம் வருகையில் குதிரையும் ஆமை முதலிய நீர்வாழ்வனவும் மற்றும் யாகத்திற்கு வேண்டிய பசுக்களும் ஆகிய இவையெல்லாம் விதிப்படி கொண்டுவந்து கட்டப்பெற்றன. அந்த யாகத்தில் யூபஸ்தம்பங்களில் முந்நூறு பசுக்களும் சிறந்த ஒரு குதிரையும் கட்டப்பட்டிருந்தன

அரசன் முதல் மனைவியான கோசலை யென்பாள் அக்குதிரையைச் சுற்றி வந்து அக்குதிரையை மூன்று வெட்டாக வெட்டிக் கொன்றாள். பின் அவள் தருமகாரியத்தில் விருப்பமுடையவளாய் கலங்கா நெஞ்சுடன் அவ்விரவுமுழுவதும் கட்டித்தழுவி அந்தக்குதிரையோடு கூடியிருந்தாள்.

பின் கௌசலை கைகேசி சுமித்திரை முதலிய இராஜஸ்திரிகளை அத்வர்யூ, ஹோதா முதலிய முக்கியமான இருத்துவிக்குகளுக்குத் தட்சணையாகத் தசரதர் கொடுத்துவிட்டார். இருத்துவிக்குகள் இராசபத்தினிகளைக் கைபற்றிகொண்டு சில நேரந்திரிந்தனர். பின்பு அவர்களுக்கீடாக திரவியங்களைப்பெற்று அவர்களை அவ்வரசனுக்கே கொடுத்துவிட்டார்கள். இந்த அசுவமேத யாகம நடந்த அன்றே கௌசலையும் கைகேசியும் சுமித்திரையும் கருத்தரிக்கின்றனர்.

இந்த யாக விவரமெல்லாம் வால்மீகி ராமாயணம பதினான்காவது சர்க்கத்தில் காணப்படுகிறது. இதனை மொழி பெயர்த்துள்ள பண்டித அநந்தாசாரியார் இந்த இடங்களைப்பற்றிப் பின்வருமாறு மொழி பெயர்க்கின்றார். "கௌசல்யை அக்குதிரையை மூன்று கத்திகளால் கொன்றாள். கௌசல்யை ஓரிரவு முழுதும் அக்குதிரையோடு கூடியிருந்தாள். ருத்விக்குகள் ராஜஸ்திரீகளை மன்னவர் தக்ஷிணையாகக் கொடுத்ததினால் கைப்பற்றினார்". பண்டித நடேசசாஸ்திரியார் பின்வருமாறு மொழி பெயர்த்து எழுதுகின்றார். "கௌசல்யை அக்குதிரையை வாளால் சில துண்டுகளாக வெட்டி வீழ்த்தினாள். அன்றியும் ஸ்திரசித்தத்துடன் அவள் புத்திர பாக்கியம் அடையும் விருப்பத்தால் 'சாஸ்திர விதிப்படி' அன்றிரவு முழுதும் அவ்வசுவத்தின் அருகே இருந்தாள். ஹோதா, அத்வர்யு, உத்காதா முதலிய யாககர்த்தாக்கள் உரிய தக்ஷிணைகளைப் பெற்று ராஜபாரியைகளுடன் இருந்து சடங்கு நடத்தினார்கள்".

பண்டித மன்மத நாததத்தர் பின்வருமாறு மொழி பெயர்த் தெழுதுகிறார். "Kausalya with three strokes slew that horse, experiencing great glee. Kausalya with an undisturbed heart passed one night with that horse. The Hotas, Adhwaryus and the Ugatas joined the king's wives". இதன் பொருள் வருமாறு:— "கோசலை மூன்று வெட்டில் அந்தக் குதிரையை மிக உற்சாகத்தோடு கொன்றாள். அவள் கலங்கா நெஞ்சோடு ஓர் நாளிரவை அக்குதிரையோடு கழித்தாள், ஹோதா, அத்வர்யு முதலிய ரித்விக்குகள் இராசபாரியைகளைப் புணர்ந்தார்கள்.

(பண்டித வில்சன்துரை மகனார்) வேதகால இந்து மதம் (Vedic Hinduism) என்ற நூலில் பின் வருமாறு எழுதுகிறதாகக் குறிக்கப்பட்டுள்ளது. "Kausala is dircted to be all night in closest contact with the dead horse. In the morning, when the queen is released from this disgusting and in fact, impostible contiguity a dialogue, as given in the yajush, and in the Ashvamedha section of the Sathapatha Brahmna, and as explained in the Sutras, takes place between the queen and the females accompanying or attended upon her and the principal priests which the brief, is in the highest degree both silly and obscene". இதன் பொருள் வருமாறு:—"கோசலை ஓர் இரவு முழுதும் செத்தகுதிரையை நன்றாகத்தழுவிப் படுத்திருக்கச்செய்யப்பட்டாள். காலையில் இந்த அருவருப்பானதும் உண்மையாகவே அசாத்தியமானதுமான அக்குதிரையின தேகசம்பந்தத்தினின்றும் நீங்கின உடனே யசுர் வேத சதபத பிராமண அசுவமேத அத்தியாயத்திலும், சூத்திரங்களிலும் விவரித்துள்ளபடி இராசபத்தினிகளுக்கும் அவர்களைச் சூழ்ந்துள்ள பெண்களுக்கும் ருத்விக்குகளுக்கும் ஓர் சம்பாஷணை நடைபெற்றது. அது சுருக்கமானதாக இருந்த போதிலும் சொல்லுவதற்கு மிகவும் அசங்கிதமாகவும் அருவருப்பை உண்டாக்குவதாயும் இருக்கிறது.

தெலுங்கில்வால்மீகி ராமாயணத்தைமொழிபெயர்த்துள்ள பண்டித லட்சுமணாசார்லு தமது மொழி பெயர்ப்பில் பக்கம 181ல் யாகம் முடிந்தவுடன் நடத்துபவன் தனது மனைவியரை குருக்களிடம் தட்சணையாக ஒப்புவிக்கவேண்டுமென்பதும் பின் பணம் பெற்றுக்கொண்டு அப்பெண்களைச் சொந்தக்காரனிடம் ஒப்புவிக்கவேண்டுமென்பதும் சாஸ்திரவிதி" என்றெழுதுகிறார்.

மேலே கண்ட செய்கைகளை பார்க்குமிடத்து ஆரியர்களது அருவருப்பான செய்கைகள் நன்கு புலனாகின்றன பலசாலியான ஒரு வீரன் கூட மூன்று வெட்டில் ஒரு பெரிய குதிரையை வெட்டி வீழ்த்துவது சிரமம் அப்படியிருக்க ஓர் பெண் அதிலும் அரசனுடையமுதல்மனைவிபெருங்கூட்டமாக பலதேச வேந்தரும் பிறரும் கூடியிருக்குமிடத்தில் அவர்கள் காண ஓர் குதிரையை மூன்று வீச்சில் மிகவும் உற்சாகத்துடன் வெட்டி வீழ்த்துகிறாள் என்பது மனத்தினாலும் எண்ண முடியாத படி அருவருக்கத்தக்க செய்கையாக உள்ளது அப்படியானால் அப்பெண்ணின் மனோ பாவங்கள் எப்படியிருந்திருக்க வேண்டும் மேலும் அவ்வாறு வெட்டிக் கொன்ற குதிரையோடு ஓர் நாளிரவு முழுதும் கலங்கா நெஞ்சோடும் கட்டித்தழுவிகூடியிருந்தாளென்பதும் சாதாரணப் பெண்களால செய்யக்கூடாத செயலாகவேயிருக்கின்றது மனிதர்கள் செயலுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது இவ்வாறு கூடியிருந்ததும் தனியேயாயினும் பல நாட்டு முடி வேந்தர் நடுவில் அமைத்திருந்த பந்தலிலேயே இதற்கும் மேல் ஆராயத்தக்குந்தது தசரதன் ராஜபத்தினிகளை ருத்விக்குகளிடம்ஒப்புவித்தும் அவாகள் அப்பெண்ணை கூடிச்சடங்கு நடத்தியதுமே அதன் பின்னர் அப்பெண்கள் அரசனிடம் ஒப்புவிக்கப் பெறுகின்றனர்.

இதனால் ஆரியர் தங்கள் குடும்ப விருத்திக்காக இந்த யாகத்தை வைத்திருக்கின்றனரென்பது வெளிவாகிறது. "புத்திருண்டாகச் . செய்பவல்லவரான ருசிய சிருங்கன் முதலிய சேர்க்கை பிரசாதத்தால் பிள்ளைகளை அடைகிறான். இதன்மேல் நிகழ்ந்ததை ஆராய்வோம்

அத்வர்யு அந்தச் செத்த குதிரையின் வபையை இழுத்து எடுத்து அக்கினியில் நன்றாகப் பாகம் பண்ணினான். தசரதன அவ்வாறு பாகம் பண்ணப்பட்டபோது கிளம்பிய அவ்வபைப்புகையை மோந்துபார்த்து நின்றான். பின் அக்குதிரையின் பிற அவயவங்களெல்லாம தீயில் பாகம் செய்யப் பெற்றன. பின் தானத்தோடு யாகம் முடிகிறது.

இதனால் ஆரியர்கள் கணக்கிறந்த மிருகங்களையும், பாம்புகளையும், பறவைகளையும், ஆமைமுதலியநீர்வாழ்பவைகளையும கொண்டுவந்து கட்டி வெட்டித் தீயில் நன்றாகப் பாகம் பண்ணி உண்டு வந்தது தெளிவாகிறது. குதிரை முதலிய மிருகங்களை உண்டலோடு நில்லாது பாம்பு, ஆமை முதலிய

இதன் தொடர்ச்சி 16 ம் பக்கம் பார்க்க.

# புதியன புகுதலும் பழயன கழிதலும்.

"நவசக்தியில்"
திரு வல்லை பால சுப்பிரமணியம் பி. எ. எழுதுவது.

(29-1-28-ந் தேதி தொடர்ச்சி)

நம் நாட்டில் பழைமையைக்கொண்டாடுதல் நூலெழுதுதலிலும், சொற் பொழிவுகள் நிகழ்த்துவதிலும் கூடப் புகுந்து விட்டன. எடுத்ததற்கெல்லாம் மேற் கோள்; எடுத்ததற்கெல்லாம் சாத்திரம்; நினைத்ததற் கெல்லாம் பழமொழி, தருமம் என்பதைப் பற்றியொரு புலவர் சொற் பொழிவு நிகழ்த்தினால் முதலில், "அறஞ்செயவிரும்பு" என்று அவ்வையார் திருவாய் மலர்ந்தருளினதாலும், அதற்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் அறம்-தருமத்தை; செய்-செய்வதற்கு விரும்பு - நீ ஆசைப்படு என்று உரை கூறினதாலும், எம் சகோதரர்களே! நீங்கள் தருமத்தைச் செய்ய வேண்டும் என்று ஆரம்பித்துப் பிறகு அறம் முப்பத்திரண்டு வகைப்படும் என்று அவற்றை சூடாமணி நிகண்டினின்றும் நெட்டுருப்பண்ணினதை ஒப்பிவித்து விட்டுப் பிறகு, தருமத்தின் சிறப்பைத் திருக்குறள், கந்தபுராணம், பெரியபுராணம், சீவகசிந்தாமணி காசிகாண்டம் பிரமோத்தர காண்டம்; பிரபு லிங்க லீலை முதலிய எண்ணிறந்த நூற்களினின்றும் படலம் படலமாகவும் காண்டங் காண்டமாகவும் செய்யுட்களை மழை பொழிவது போல் பொழிந்து விட்டு, அரை மணிநேரம் அவையடக்கங் கூறிவிட்டுச் சிங்க வேற்றைப் போன்று அமர்வார். கேட்டிருந்தோரெல்லாம் "ஆகா, இப்புலவருக்கு எத்தனை நூற்களில் பாண்டித்யம் கலைமகளே இவர் நாவில் தாண்டவமாடுகிறாள் எத்தனை மேற்கோள் எத்தனை அத்தாட்சிகள், ஒருநூலா ஒரு சாத்திரமா, ஒரு புராணமா" என்று அதிசயித்து விட்டு வீட்டிற்கேகுவார்கள் கடைசியில் பார்த்தால், குழுமியிருந்தோர், அறத்தைப் பற்றி யொன்றுமே கேட்கவில்லை பல நூற்களின் பெயர்கள் மட்டுமே கேட்டனர் சொற்பொழிவும் முடிந்தது புலவர்க்கும் மாலையிட்டார்கள் "பிரசங்க சண்டமாருதம்" என்ற அதற்குப் பட்டமும் தந்தாயிற்று. அம்மம்ம! சாலும், ஒருபிடி சோறு ஒரு பிச்சைக்காரனுக்கு வழங்குதற்கோ இத்தனை ஆரவாரம், இத்தனை மேற்கோள், இத்தனைப் பெரிய படிப்பாளி வேண்டும் பெரும்புலமை இன்னதென்றறியாத எம்பெருமான், காஞ்சிபுரம் பச்சையப்ப வள்ளல் இத்தனை நூற்களைப்பயின்றா, வடகோட்டினின்றும் தென்முனை காறும் எண்ணிறந்த அறச்சாலைகள் நிறுவியும் பள்ளிகள் அமைத்தும், தம் பெயரை என்றென்றும் பசுமையாகவே செய்து கொண்டனர். இதனால் மேற் கோள்கள் எடுத்துரைத்தல் கூடாது என்பது எம் கருத்தன்று அன்பர்கள் திரிபுணர்ச்சியால் எமமைக் கண்டித்தல் வேண்டா.

இன்றியமையாத விடங்களில் மேற்கோள்கள் கூறுதல் வேண்டுமே தவிர்த்து, தாம் கற்ற நூல் இவையிவை யென்று மக்கள் தெரிந்து கொள்ளுதற் பொருட்டன்று, மனோதத்துவம் ஒரு நாட்டின அறிவுவளர்ச்சியில், மிக்க இளமைப்பருவத்தைக் குறிக்கின்றதுமன்றிசொந்த அறிவை அகன்று பரவவிடாது இத்தனை நூற்களும் இப்புலவரைத் தமக்கு அடிமையாக்கிக் கொள்கின்றன தம்மை விட்டு அப்புறம் போகவிடாமல் மறித்து விடுகின்றன. இத்தகைய புலவர்களுக்கு நற்காலமாக பாண்டித்துரைத் தேவர்கள் பன்னூறாயிரட் டொன்றையும் தொகுத்து கொடுத்துவிட்டார் 'நாயினுங் கடையேன், அழுகிக்கிடக்கின்ற மலத்திலுழலுஞ் சிறிய புழுவினுஞ்சிறியேன் என்று அரை மணி அவையடக்கங்கூறி இப்புலவர் உண்மையில் அவைக்கு அடங்கியவராக தம்மைக் கருதுகின்றாரா? வென்றால் அதுவுமில்லை. சின்னேரங்கழிந்த பிறகு, 'என்னைப்போல் அவையடக்கம கூறுதலில் யார் சமர்த்தர்?" என்று இறுமாந்து பேசுகிறார். ஆகவே, இத்தனை ஆரவாரமும், அவைபடக்கமும், வெறும் நாடக நடிப்பென்று விளங்கி விட்டனவன்றோ? 'மனம் வேறு சொல்வேறு மன்னு தொழில் வேறு' என்றபடி இத்தகைய ஒன்றுக்கும் பற்றாத கல்வியைப் பயின்று என் செய்தற்கு? நடுவு நிலையுடையீர், நீவிரே கூறுமின்கள் "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்."

நற்காரியங்கள் செய்வதற்குத்தான் இத்தகைய புராணங்களும், பிரமாணங்களுமென்றால், தீய செயல்களைச் செய்தற்குங்கூட வேதங்களும், புராணங்களும் ஸ்மிருதிகளும். மற்றும் பழமொழிகளும் அடுத்துச் சான்றுகள் பகரும். பெண்மக்கள் என்றும் பராதீனப்பட்டவர்களே யன்றிச் சுவாதீனம் உடையவர்களல்ல வென்று மனுஸ்மிருதி முழக்குகின்றது. பெண்களையும், அடிப்பது ஆண்மக்களுக்கு ஒருரிமை என்பதற்கும், அவ்வாறடித்தல் நலம் என்பதற்கும் மணமகன், மணமகள் என்னுமிருவரிடையே உளவாய வேறுபாடுகள் எத்தனையவாயினும், ஒருகுலத்திற்குள்ளேயே அவ்விருவரும் மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்னும் நியதியை பற்றியும், மற்றும் இவற்றினை யெல்லாம் வற்புறுத்தற்கு அம்மம்ம! எத்தனைப் பழமொழிகள் இருக்கின்றன.

'சாண்பிள்ளை யானாலும் ஆண்பிள்ளை' 'அடியாத மாடு படியாது' 'அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்' 'அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் வழிக்கு வரா' 'மங்கியப் பெண்களுக்கு மாதம் இரண்டு பூசை' 'நல்ல மாட்டிற்கு ஓரடி நல்ல பெண்ணிற்கு ஒரு சொல்' 'புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன்' 'அடி உதவுகிறது போல அண்ணன் தம்பி உதவுவார்களா? 'அடியென் றழைக்கப் பெண்டாட்டியில்லை அடித்துவளர்க்கப்பிள்ளையில்லை' 'குலத்திலே குரங்கைக்கொள்' 'எண்ணறக்கற்றாலும எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின் புத்தியே'

என்னும் இவை போன்ற தீய பழமொழி நம் செந்தமிழ் நங்கைக்கே ஒரு கறையாயிருப்பது மன்றி. செந்தமிழ் நாடும், தமிழ் மக்களும் இது போழ்து எய்தியிருக்கும் சீர்கேட்டை நன்குணர்த்துவனவன்றோ? இவை போன்ற பல்லாயிரம் பழமொழிகளுள், ஒரு சிலவே ஈண்டு எடுத்துக் காட்டினோம் எம் அருமைத் தென்றமிழ் நாட்டுத் தமிழ் மக்களே இவையெல்லாம் சான்றோர் பழிக்கும் சொற்கள் ஆகவே, நமது ஈன்றாள் பசி காண்பிராயினும் இவையிற்றினைச் சொல்லற்க என்று உண்மையில் எமது ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்கிறோம்.

ஆ! சில்லாண்டுகட்கு முன்னர். எம் அருமை அன்னையின் மணி வயிற்றினின்றும யாம் பசுளங் குழவியாக கிழிறங்கிய போது, எத்தனைமகிழ்ச்சியோ டிருந்தோம் எம்மனம் மாசு மறுவற்று தூயதாய்ப் பளிங்கு போல்விளங்கிற்று எமக்குஎல்லா உரிமையும் உண்டென்று இறும்பூதெய்தினோம். 'நாமார்க்குங்குடியல்லோ' மென்றிருந்தோம் எமக்கு இவ்வழகிய உடம்பினைத் தந்தருளிய இறைவனை வாழ்த்துதற்கு எமக்குசொல் லின்மையால், கால்களையும் கைகளையும் ஓயாது இயக்கி, அப்பெருமானுக்கு நன்றி செலுத்தினோம் ஆனால், அந்தோ அன்றே எமக்குச் சனிபிடித்தது இஞ்ஞான்று, எம்மை ஓர் இருப்புச் சட்டத்தில் வைத்து இறுகக் கட்டி விட்டது போன்றிருக்கின்றது. அம்மெம்மை இப்படி, அப்படி அசைக்க கூடவில்லை அதிலும், அவ்விருப்புச் சட்டம் எம்மனத்தையும் கட்டி விட்டதன்றோ பெரிய ஆச்சர்யம் ஓர் அவசர வேலையாக வீட்டை விட்டு வெளியே போக முடியவில்லை ஏன்? ஒரு பூனை குறுக்கே வந்தது யாம் இஞ்ஞான்று வசிக்கும் வீடு மக்கள் வாழ்தற்கு இசைவாயில்லாமல், எம்மை எந்நேரமும் நோய்வாய் படுத்தி எம்மை அணித்தே கூற்றுவனுக்கு இரையாக்குவதாயிருப்பினும், வேறோர் அழகிய வீட்டிற்கு எம்மால் போக முடியவில்லை ஏன்? யாம் போகவிருக்கும் அவ்வீட்டினெதிரே வெள்ளி முளைத்திருக்கிறது ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஒருதமிழ் வாணரது சொற்பொழிவைக் கேட்க விழைந்து எம்மகத்தை விட்டு 5 மணிக்கு புறப்படுவோமென்றால், கூடாது ஏன்? இராகுகாலம் எம்மைப் பெரிய நிலைமைக்குக் கொணரும் ஒருவரைச் சிதம்பரத்திற் சென்று இன்றியமையாது அன்று தான் பார்க்க வேண்டுமானால் கூடவே கூடாது; யாங்கீழ்நிலை யெய்தினும் எய்துக; ஆண்டேகுதல் கூடாது, ஏன்? தெற்கே வாரசூலையும் மரண யோகமும் உற்ற காதலினாலொருப்பட்ட எம் காதலியை யாம் மணக்க விழைந்தால் கூடாது. ஏன்? எங்களிருபேருக்குமிடையில் சாதகப் பொருத்தமில்லை. இதனால் எம் எதிர்காலங் கேடுறினும் உறுக அவளுக்கு மன்றல் மாலை சூட்டுதல் ஆகாது. எமமனம் நாடாத ஒரு பெண்ணிற்கு யாம் மணமாலை சூட்டியாதல் வேண்டும், ஏன்? அவள் எங்குலத்தினள். 'குலத்திலே குரங்கைக்கொள்' என்னும் பழமொழி சான்று பகருகிறதன்றோ? எமது பெற்றோர், மேதக்க சான்றோர்கள் கடவு

இதன் தொடர்ச்சி 15 ம் பக்கம் பார்க்க

## ஆவலாதிகள்.

சுமார் மூன்றுமாத காலமாய் 'குடி அரசு' பத்திரிகை வாசகர்களிடமிருந்து, அளவுக்கு மீறின அதாவது வாரந்தவறாமல் 50 பேர்களுக்கு குறையாத கனவான்களிடமிருந்து, பத்திரிகைகள் வந்துசேரவில்லை யென்பதாக ஆவலாதிகள் வரப்பெறுகின்றோம். பலர் மிக்க கோபமாய் கடும் வார்த்தைகளும் உபயோகிக்கின்றார்கள். வெளிநாட்டு ஆவலாதிகளும் அதுபோலவே வருகின்றன. இவைகளுக்கு நாம் என்ன சமாதானம் சொல்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

இங்கு 'குடி அரசு' ஆபீசில் சகலத்திற்கும் கணக்கு சரியாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் இத்தனை பத்திரிக்கைகள் அடிக்கப்படுகின்றன என்பதற்கும், இவ்வளவு தபால் முத்திரைகள் வாங்கப்பட்டது என்பதற்கும், கணக்குகள் சரியாகவே சரி பார்க்கப்பட்டு வருகின்றன. வண்டியில் மூட்டைகளாகக் கட்டி தபாலுக்கு அனுப்பப் படுகின்றன. இந்நிலையில் பத்திரிகை பலருக்கு அதுவும் வாரம் ஒன்றுக்கு நூற்றுக் கணக்கான பேருக்கு சரியாய்ப் போய்ச் சேரவில்லை என்பது நமக்கு மிகுதியும் வருத்தத்தைக் கொடுக்கின்றது.

தவிர சரியான காலத்தில் கிடைப்பதில்லை என்கின்ற ஆவலும் வருகின்றது.

சென்ற வாரத்திற்கு முந்தினவாரம் தவிர மற்ற வாரமெல்லாம் சரியான காலத்திலேயே தபாலுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றது. தபால் இலாகாவில் பல இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது.

அதாவது ஒரு தடவை "கடைசி வண்டி மூட்டைகள் 5 மணிக்கு வந்ததால் சில மூட்டைகள் நின்றுவிட்டன" என்று தபால் ஆபீஸ் தலைவர் எழுதினார்.

அடுத்த வாரம் 4-45 (நாலே முக்கால்) மணிக்குள்ளாகவே எல்லா மூட்டைகளையும் அனுப்பினோம்.

அந்த வாரமும் தங்கள் கடைசி வண்டி 4-45 க்கு வந்ததால் சில மூட்டைகள் நின்றுவிட்டது என்று எழுதினார். அடுத்த வாரம் நாலு மணிக்கே போய்ச் சேரும்படி எல்லா மூட்டைகளையும் அனுப்பிவிட்டோம், இதற்கு பதிலாக "உங்கள் மூட்டைகள் அநேகமாய் நின்றுவிட்டன ஏனென்றால் மேல் விலாசத்தில் ஊர் பெயர் ஆங்கிலத்தில் இல்லாததால் அனுப்ப முடியவில்லை" என்று கடிதம் வந்திருக்கின்றது.

இது தவிர வி. பி. களும் அநேகமாகத் திரும்பி வருவதும், அடுத்த நாள் விலாசதாரர் பணத்தை மணியார்டரில் அனுப்புவதுமாய் இருக்கின்றது. இந்த கஷ்டத்தில் நமது பத்திரிகை பிரசாரம் நடக்கவேண்டியிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம். கடைசியாக ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். 5000 முதல் 5250 பத்திரிகைவரை கணக்குப்பிரகாரம் பிரசுரித்து வருகின்றோம் என்பதற்கும், தபாலாபீசில் வாரம் ஒன்றுக்கு மொத்தமாக 85 ரூபாய்க்கும், சில்லரையாக 15 ரூபாய்க்கும் ஸ்டாம்பு வாங்கிவருகின்றோம் என்பதற்கும், எல்லா பார்சல்களும் ஞாயிற்றுக் கிழமையே ரயிலில் அனுப்பி வருகின்றோம் என்பதற்கும் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை என்று உறுதி கூறுகின்றோம். நம்மீது வீணாக ஆத்திரப்படுவதில் பயனில்லை. மானேஜர்.

### வித்தியாசம் ஒழிந்தது

M. S. M. ரயில்வேயைச் சேர்ந்த இந்து பிரயாணிகள் சாப்பிடும் சிற்றுண்டிச் சாலைகளில் பார்ப்பனருக்கு வேறு இடம் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு இடம் என்கின்ற வித்தியாசத்தை எடுத்துவிட ரயில்வே அதிகாரிகள் சம்மதித்து விட்டார்களாம். ஆனால் தென் இந்தியா ரயில்வேகாரர்கள் ஒரு சிறிதும் இது விஷயத்தில் கவலை இல்லாதிருக்கின்றார்கள். ஏனென்றால் தென் இந்திய ரயில்வே முழுவதும் தென் இந்திய பார்ப்பனர்களின் ஆதிக்கம் கொண்டிருப்பதால் முடியாமலிருக்கின்றது. ரயில்வே அட்வைசரி கமிட்டி என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அதில் பார்ப்பனரல்லாதார் இருக்கின்றார்கள் ஆனாலும் அக் கமிட்டி மெம்பர்களுக்கு தாங்களும் தங்கள் பெண்டுபிள்ளைகளும் ரயில் பிரயாணம் செய்யும் போது ரயில்வே அதிகாரிகள் தக்க சௌகரியம் செய்து கொடுப்பதே திருப்தி தரத்தக்கதாகி விடுகின்றது.

### பகிஷ்கார ரகசியம்
### இங்கிலாந்திலும் வெளியாய் விட்டது

இங்கிலாந்தில் ஹார்த்தலைப்பற்றிப் பேசின ஒரு கூட்டத்தில் பஞ்சாபில் 'கவர்னராயிருந்த ஒரு பிரபு 'ஜாதித்திமிர்கொண்ட பார்ப்பனகூட்டத்தார்தான் தங்களுடைய உயர்வை நிலை நிறுத்திக்கொள்ள கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூச்சல் போடுகிறார்கள்' என்று பேசியிருக்கிறார்.

### பார்ப்பனீயத்தையும், புரோகிதத்தை ஒழித்த வீரர்கள்

ஸ்ரீமான்கள்

1 சி. சுப்பய்யாபிள்ளை
பாரனூர் இராமநாதபுரம் ஜில்லா.

2 முத்துகிருஷ்ண பிள்ளை
பாரனூர் இராமநாதபுரம் ஜில்லா,

3 பி. அப்பாவு பிள்ளை
ஓமலூர், தர்மபுரி.

4 ஆ. சோமசுந்தரம் அண்டு
எ. பாலகிருஷ்ணன் சோளவந்தான்

5 அ. சிவப்பிரகாசம்
சூசையப்பர் கல்லூரித் தலைமைத்
தமிழ்ப்புலவர் உறையூர்.

6 அ. சுப்ரமண்யம்
மெயில் சார்ட்டர் உறையூர்

7 சு. ப, கதிரேசம் பிள்ளை
மூவார், சிங்கப்பூர்

8 வி. மலையபெருமாள் பிள்ளை
பூதமங்கலம் மன்னார்குடி தாலூகா

### தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடு.

12—2—28 திருவாரூர் திராவிட சங்கத்தில் மாலை 3 மணிக்கு தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்பு கழகக்கூட்டம் நடைபெறும் என்று நமக்கு ஒருவர் எழுதுகிறார்.

### நாகப்பட்டணம் தேசபக்த சமாஜம்

4—2—28 ல் கூடிய நிர்வாகக் கூட்டம் சமாஜத்தின் 7.ம் ஆண்டு விழாவை மார்ச்சு மாதம் 11 தேதி 12 தேதிகளில் நடத்துவதாக தீர்மானித்திருக்கிறது. அது சமயம் 'ஜஸ்டிஸ்' ஆசிரியர் ஸ்ரீமான் ராமசாமி முதலியார் 'குடி அரசு' ஆசிரியர் ஸ்ரீமான் ஈ, வெ. ராமசாமி நாயக்கர், 'குமரன்' ஆசிரியர் ஸ்ரீமான்முருகப்பசெட்டியார் ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியார் முதலியவர்கள் உபந்நியாசம் செய்வார்கள்,

காரியதரிசி.

### பார்ப்பனீயமொழிந்த பிள்ளையார் பிரதிஷ்டை

சென்ற 5—2—28 ல் ஞாயிற்றுக்கிழமை மூலவாய்க்காலுக்கெதிரேயுள்ள பிள்ளையார் கோவிலுக்கு கோபி தாலுக்கா மூலவாய்க்கால்திரு க ராமசாமி கவுண்டர் குமரர் நாராயணசாமி கவுண்டரால் பிராமணர்களை நீக்கிபிள்ளையார்பிரதிஷ்டை நடத்தினர்கள்.

### கமிஷனுக்கு ஆதரவு
### திருச்சி மருவதுவர் சங்கம்

21—1—28ல கி. அய்யா கண்ணு பண்டிதர் தலைமையில் கூடி கமிஷனை பகிஷ்கரிக்ககூடாதென்றும் சட்ட சபைகளிலும் தாலுக்கா போர்டு முனிசிபல் சபை முதலியதுகளிலும் மருததுவர்களுக்கு ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்றும் மருத்துவர்களின் பிரதிநிதியாக திரு. ஆனந்தம் அவர்களை அனுப்பி மருந்துவர்களின் தேவையையும் குறைகளையும் கமிஷனிடம் தெரிவிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தது.

### தஞ்சை ஜில்லா 2 வது பாரப்பனரல்லாதார் இளைஞர் மகாநாடு

ஷை மகாநாடு தஞ்சையில் 26—2—28 ஞாயிற்றுக்கிழமை கூடும், திரு சக்கரை செட்டியார் அவர்கள் பி எ பி எல் தலைமை வகிப்பார்கள், திருமதி மிஸ்ர்ட சி, டி. நாயகம் அவர்கள் பி. எ. எல். டி. ஷை மகாநாட்டை திறந்து வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள் தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர்களும் வாலிப சங்கங்களும் ஏராளமான பிரதிநிதிகளை அனுப்பி மகாநாட்டை சிறப்பித்து நடத்துவதோடு மகாநாட்டில் கொண்டுவரும் தீர்மானங்களையும் அமைச்சருக்கு 15—2—28க்குள் எழுதக்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அமைச்சர்.

### வடாற்காடு ஜில்லா
### 9 வது கூட்டுறவு பெருங்கழகம்.

1928 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 25. 26 தேதி சனி ஞாயிறு கிழமைகளில்காவேரிப்பாக்கம் அடுத்த ராமாபுரம சத்திரத்தில் நடைபெறும். பெருமை தாங்கிய வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஏ அரங்கநாத முதலியார் அவர்கள் கழகத்தை திறந்து வைக்கவும் சித்தூர் கூட்டுறவு ஜில்லா பெடரேஷன் தலைவர் ராவ் பகதூர் க முனுசாமி நாயுடுகாரு தலைமை வைக்கவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்,

# கற்பு.

சித்திரபுத்திரன் எழுதுவது.

## ஸ்ரீமான் P. R. பரமசிவ முதலியார் எழுதியதற்கு பதில்.

இந்த வியாசத்தின் காரணமான ஆதி வியாசம் 8—1—28 தேதி 'குடி அரசில்' வரையபட்டிருக்கிறது. அதற்கு ஸ்ரீ பரமசிவ முதலியாரின் மறுப்பு 22—1—28-உ 'குடிஅரசில்' பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இதைப்படிக்கும் நண்பர்கள் மேல் கண்ட இரண்டு வியாசங்களையும் வைத்துக் கொண்டு வாசிப்பது நலமென தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாம் "வள்ளுவர் ஒரு பெண்ணாக இருந்து குறள் எழுதியிருந்தால் இக்கருத்துக்களை கூறியிருக்கமாட்டார்" என்று குறிப்பிட்டிருந்ததற்கு ஸ்ரீ முதலியார் அதை ஒருவாறு ஒப்புக்கொண்டு "தன்னலங்கொண்ட ஒரு கூட்டத்தார் ஏற்றுக்கொள்ளவில்லையானால் நீதியானது அநீதியாகி விடுமோ" என்று பதிலிருத்தியிருக்கிறார்.

இங்கு ஸ்ரீ முதலியார் பெண்களை தங்நலங்கொண்ட கூட்டத்தார் என்று குறிப்பிட்டது பெண்களுக்கு நீதி வழங்கியதாகுமா என்பதை யோசிப்பதோடு பெண்கள் தர்மம் எழுதுவதில் ஆண்கள் இம்முறை கொண்டு பிரவேசிப்பது தன்னலங்கொண்டதாகாதா என்பதையும் சிந்திக்க வேண்டுகின்றோம்.

(இந்த இடத்தில் 'கருத்து' இன்னது என்பதை முடிவு கட்டாவிட்டாலும்) 'தமிழ் நாட்டில் வாழ்ந்த வாழுகின்ற பெண்ணரசிகளும் அக்கருத்துகளை ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்" என்று எழுதியிருக்கின்றார். எந்தப் பெண்ணரசியாகிலும் தன்னை ஆண்பிறவிக்கடிமை யென்றாவது தாம் அப்பிறவிக்கு கீழ்பட்டவர்க்ள் என்றாவது ஆண் தன்மையைவிட பெண் தன்மை ஒரு கடுஅளவாவது தாழ்ந்தது என்றாவது எண்ணிக் கொண்டிருப்பார்களானால் அவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை பெண்ணரசி யென்று சொல்ல நாம் ஒருக்காலும் ஒப்போம்.

'பல தலைமுறைப்பழக்கத்தால் பெண்கள் அக்கருத்துகளை ஏற்றுக்கொள்கின்றனர்' என்று சித்திர புத்திரன் எழுதியிருப்பதும் அதை தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் தாழ்ந்த நிலையை ஏற்றுக்கொள்வது போலாகும் என்பதற்கு ஒப்பிட்டு சித்திரபுத்திரன் எழுதி இருப்பதும் 'தாய்மார்களை பழித்து கூறியதாகும்' என்று ஸ்ரீ முதலியார் கூறுகின்றார்.

அதற்கு காரணம் காட்டுவதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்குறிய சாதனங்கள் கிடைக்கவொட்டாமல் செய்து விட்டதால் அன்னார் அறியாமை உடையவராகி விட்டாரென்றும், பெண்களுக்கு அது பொருந்தாதென்றும் ஸ்ரீ முதலியார் சொல்லுகின்றார்.

இதை ஸ்ரீ முதலியார் ஆராய்ச்சியுடன் கூறியிருப்பதாக நமக்கு விளங்கவில்லை. ஏனெனில், எந்தக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற கூட்டம் ஏற்பட்டதோ எந்தக் காலத்தில் எந்த கூட்டத்தாரால் 'தாழ்த்தப்பட்டோருக்கு அறிவு வளர்ச்சிக்குறிய சாதனங்கள் இல்லாமல் செய்யப்பட்டதோ' அந்தக் காலத்திலேயே அந்தக் கூட்டத்தாராலேயே பெண்மக்களுக்கும் அறிவு வளர்ச்சிகுற்ற சாதனங்கள் இல்லாமல் செய்யப்பட்டு தாழ்த்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இதை ஏன் ஸ்ரீ முதலியார் உணரமுடியவில்லை என்பது நமக்கு அறிய முடியவில்லை.

தவிர பெண்களின் அறிவுத் திறத்திற்கு உதாரணமாக ஸ்ரீ முதலியார் ஒரு ஔவை பிராட்டியை எடுத்துக்காட்டுகின்றார். அதே மூச்சில் திருவள்ளுவரையும் எடுத்துக்கொண்டிருப்பாரானால் தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளும் ஏதோ ஒருவருக்கு அறிவு வளர்ச்சி இருந்து வந்தது என்பதை ஒத்துக் கொண்டிருப்பாரானால் நாம் ஒன்று இரண்டு பெண்ணரசிகளைப்பற்றிப்பேசவாவில்லை என்றும் தற்காலத்து நிசமும் நூற்றுக்கு தொண்ணூற்தென்பதே முக்காலே மூணுவீச அரைவீசம் பெண்களைப்பற்றி பேசுகின்றோம் என்பதையும் உணரவேண்டுகின்றோம்.

அன்றியும் இதனால் சித்திர புத்திரன் தாய்மார்களைப் பழித்துக்கூறியவனானால் ஸ்ரீ முதலியார் 'தாழ்ந்த ஜாதி' என்பவர்களை பழித்துக்கூறியதாக ஏற்படவில்லையா? என்கின்றோம்.

உண்மையை பேசும்போது அதனால் யாருக்கு பழிப்பு ஏற்படுமானாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது அப்பழிப்புக்கு காரணமாயுள்ளதை ஒழிக்க முயலவேண்டியதே வீரன் கடமையாகும்.

தவிர ஔவைப் பிராட்டியாரும் திருவள்ளுவரையே ஆரண் செய்கின்றார் என்பதற்கு எடுத்துகாட்டாக ஔவையாரின் 'தையல் சொற் கேளேல்' என்கின்ற முதுமொழியை எடுத்துக்காட்டி அதற்கு ஆரணாக வள்ளுவரின் 'பெண்வழிச் சேரேல்' என்கின்ற வாக்கை சுட்டிக்காட்டுகின்றார். மற்றும் 'பேதமை என்பது மாதர்க்கணிகலம்' என்ற பிராட்டியாரின் முதுமொழியையும் கூடவே குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால் ஸ்ரீ முதலியார் தனது கடைசி ஆயுதத்தை எறிந்திருக்கிறார். ஆயினும் நமக்கு கவலை இல்லை. பெண்களும் மனித ஜீவன் என்பதை ஒப்புக்கொள்ளும் எவரும் இம்மூன்றையும் ஒருக்காலும் நடு நிலைமை உள்ளார் வாக்கென்றோ உண்மை ஆராய்ந்த அறிவுடையோர் வாக்கென்றோ ஒப்புக்கொள்ள முடியாதென்பதே நமது துணிபு. அங்ஙனமில்லையாயின அவ்வக்காலநிலைக்கேற்றதென்றாவது சொல்லியாக வேண்டும். இங்கு சற்று வாசகர்களுக்கு சங்கடமுண்டாகும் என்பது நமக்குத்தெரியும். ஆகிலும் குற்றமில்லை. முதலாவது ஔவையும் வள்ளுவரும் சகோதரர்கள் என்பது ஒரு கதை. அக்கதையே ஆதி என்கின்ற புலைசிக்கும் பகவன் என்கின்ற பார்ப்பனனுக்கும் பிறந்த பிள்ளைகள் ஏழில் இவர்கள் இருவர் என்று சொல்லுகின்றது. இவற்றுள் மற்றொரு விசேடமென்னவென்றால் மேல்கண்ட ஆதிக்கும் பகவனுக்கும் புணர்ச்சி முடிந்ததும் பிள்ளையை பெற்று போட்டு விட்டுப் போய்விட்டதாகவும் கதை கூறப்பட்டிருக்கின்றது. இது சம்பந்தமாக மற்றும் பல பல கதைகளும உண்டு. அன்றியும் மற்றும் பல பல ஔவைகள் இருந்தார்கள் என்றும் சிலர் கூறுவார்கள். எனினும் இது விஷயத்தில் புராணக்கூற்றையும் சற்று ஒதுக்கிவைத்து விட்டு தனி அறிவைக்கொண்டு மேற்கண்ட நீதி வாக்கியங்களும் குறள்களும் யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அதை கவனியாமல் ஷை வாக்கியங்களை மாத்திரம் கவனித்து அதுபோன்ற மற்ற வாக்கியங்களுக்கு பொருள காணுவதுபோலவே இவைகளுக்கும் காணுவோமானால் மேல்கண்ட முதுமொழிகளின் கருத்தான 'பெண்கள் சொல்லைக்கேட்கக்கூடாது' என்பதும் 'அறியாமை என்பது பெண்களது ஆபரணம்' அதாவது அவர்களின் தன்மைக்கு ஏற்றது என்பதும் "பெண்கள் இஷ்டப்படி நடக்கக் கூடாது" என்பதுமே பொருளாக விளங்குகின்ற கருத்துகள் தான் காணக்கிடைக்கும். இனி இதற்கு விசேட உரைகளும் தத்துவார்த்தங்களும் பல பல சொல்ல பல வித்துவான்கள் முந்தக் கூடும். ஆனாலும் தத்துவார்த்தமும் விசேட உரையும் சொல்ல முடியாத சப்தங்களும் எழுத்துக்களும் வாக்கியங்களும் செய்யுள்களும் உலகத்தில் கிடைப்பது அரிது என்பது நமக்குத் தெரியும் ஆதலால் இதற்கு மாத்திரம் தத்துவார்த்தமும் விசேட உரையும் கொண்டு பொருள் கூற வரவேண்டிய காரணம் அறிவாளிகளால் ஒப்புக் கொள்ளக்கூடியதாகாது. ஔவை முதுமொழியும் வள்ளுவர் குறளும் யார் சொன்னார்கள் என்பது இங்கு காண வேண்டிய விஷயமல்ல. மற்றபடி இவ்விரண்டும நீதி நூல்களில் சிறந்ததாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றது என்பதை யாவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆதலால் தான் இதைப்பற்றி பேச முன் வருகின்றோம் இதில் குறுக்கே நிற்கும் சங்கடமென்னவென்றால் இவ்வளவு உயர்ந்த தத்துவங்களை கொண்ட நீதிகளை உணர்ந்தவர்கள் இவ்வளவு பெரிய பிழைகளை இழைத்திருப்பார்களா என்னும் விஷயமாகும். ஆனால் எல்லா விஷயங்களுக்கும் இவ்வாயுதத்தை உபயோகிக்க முற்படுவதால் அவ்வாயுதம் சில சமயங்களில் உபயோகிப்பவர்களையே மோசம் செய்து விடக்கூடும். அல்லாமலும் காலதேச வர்த்தமானத்தைக் கொண்டு தான் யாரும் எதையும் சொல்லியிருக்க முடியுமேயல்லாமல் பார்ப்பனர்கள் சொல்லுவது போல் எதையும் கடவுள் சொன்னார் என்பதும் அது எப்போதைக்குமே பொருந்தியது என்பதும் இக்காலத்திற்கு பொருத்தமற்றதாகும். இவ்விரு பெரியார்களும் உண்மையாயிருந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்நீதிநூற்கள் சொல்லப்பட்ட காலம் ஆரிய ஆதிக்கம் பரவியிருந்த கால மென்பதை யாவது ஒவ்வொருவரும் ஒப்புக் கொண்

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

## உதிர்ந்த மலர்கள்.

[சென்னை சட்டசபையில்
ராயல் கமிஷன் விதவாதத்தின் போது]

ஸ்ரீமான் வி. ஐ. முனிசாமி பிள்ளை (தாழ்த்தப்பட்ட வகுப்புக்காக நியமன அங்கத்தவர்):— மற்ற வகுப்பினர் நன்மை செய்யப் போகிறார்களென்று எத்தனை காலம் நம்பி நம்பிக் காலந்தள்ளுவோம்? காரியத்தில் ஏதேனும் செய்து காட்டுங்கள். பிரிட்டிஷார் இல்லாவிடில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் இந்த நிலைமைக்குக்கூட வந்திருக்க முடியாது.

ஃ ஃ ஃ

ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் (கோயமுத்தூர் பிரதிநிதி):— இதுகாறும் அரசாங்கம சர்வ வல்லமையுடன் இருந்து வந்திருக்கிறது. சட்ட சபையிலும் அதற்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்திருக்கிறது. ஆதலின் அரசாங்கம் விரும்பியிருந்தால் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கலாம்.

ஃ ஃ ஃ

மேற்படியார்:—ஐரோப்பியக் குற்றவாளிகளுக்கு ஐரோப்பிய ஜூரிகள் அளித்த இவ்வரசாங்கம், விரும்பியிருந்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு விசேஷ அநுகூலம் செய்து கொடுத்திருக்க முடியாதா? மலையாளத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்கள் வீதிகளில் செல்ல முயன்றபோது 144-வது பிரிவைப் பிரயோகித்தது யார்? அவர்களைத் தடுத்த மேல் வகுப்பார்மீது அதைப் பிரயோகியாமல் தாழ்த்தப்பட்டவர் மீது பிரயோகித்ததேன்?

ஃ ஃ ஃ

மேற்படியார்:—தாழ்த்தப்பட்ட வகுப்பார் விரும்பினால் ராயல்கமிஷனுடன் தாராளமாக ஒத்துழைக்கட்டும். எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அவர்களுடைய நிலைமைக்கு அரசாங்கமே பொறுப்பாளி என்னும் உண்மையைக் கமிஷனிடம் சொல்லட்டும்.

ஃ ல ஃ

கனம்மிஸ்டர் டி. இ. மாயர்:—மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டத்தின்படியே ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டதின்படி ஏற்பட்டதுதான் இந்தச் சட்ட சபை. கனம் அங்கத்தினர் இச்சபையை விட்டு வெளியேறுவதும் திரும்ப உள்ளே வருவதும் எல்லாம் அந்தச் சட்டத்தின் கீழ்தான். (சிரிப்பு) இவ்விஷயமாக விவாதிக்க இந்தச் சபைக்குள்ள உரிமையும் அச்சட்டத்தின்கீழ் ஏற்பட்டது தான். கனம் அங்கத்தினர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் அச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்களே. ஏனெனில் அச்சட்டத்தின் கீழ ஏற்பட்ட சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆதலின் அச்சட்டத்தின்படி இப்போதேற்பட்ட ராயல் கமிஷனை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பது தர்க்க நீதிக்குப் பொருந்தாது. "நவசக்தி"

### ஒன்றுக்கு ஒன்று ஆதரவு.

"எச்சில் இலைக்கு மண்ணாங்கட்டி ஆதரவு, மண்ணாங்கட்டிக்கு எச்சில் இலை ஆதரவு" போல் இனி மேல் நாமிருவரும் இருக்க வேண்டுமென்று ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும் வரதராஜுலுவும் ஒப்பந்தம் பேசிக் கொண்டார்களாம். பக்கத்திலிருந்த ஒருவன் காற்றும் மழையும் கலந்து அடித்தால் என்ன செய்வது என்று கேட்டானாம். அப்படியானால் ஒருவர் ஆகாசத்தில் பறக்க வேண்டியது மற்றொருவர் சமுத்திரம் போய்ச் சேரவேண்டியது என்று சொன்னார்களாம். ஐயோ! பாவம்!!

### பிராமணீய மொழிந்த திருமணம்

தர்மபுரி சப்மேஜிஸ்டிரேட் எட்குமாஸ்தா வேளாள குலத்தைச் சேர்ந்த கஸ்தூரி பிள்ளை அவர்களின் சகோதரன் சிரஞ்சீவி அப்பாவு பிள்ளை என்கிறவருக்கும், ஓமலூர் சப்மேஜிஸ்டிரேட் ஏ. சிங்கார முதலியார் பி. ஏ. அவர்களின் ஷட்டகராகிய பூந்தமல்லி ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணசாமி முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி லட்சுமிகாந்தம்மாள் என்னும் கன்னிகைக்கும் நாளது மாதம் 19 உ புதவாரம் 9மணிக்குமேல் சேலம்ஜில்லா ஓமலூரில் சப்மேஜிஸ்டிரேட் ஏ.சிங்காரவேலுமுதலியார் பி. ஏ. அவர்களின் வீட்டில் சென்னையிலிருந்து வந்த ஸ்ரீமான் சின்னசாமி நாயுடு அவர்களின் புரோகிதத்தின் கீழ் வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறியது.

### பூனைமேடு தேவஸ்தான கூட்டம்.

2—2—28 ல் பூனைமேடு பொது ஜனங்களுடைய ஓர் மகாநாடு இரவு 8 மணிக்கு கரிவரதராஜப் பெருமாள் கோயிலில் ஸ்ரீமான் வி பேர் நாயுடு அவர்கள் அக்கிராசனத்தில் நடை பெற்றது. இச்சமயம் தேவஸ்தானகமிட்டி இன்ஸ்பெக்டர் அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான் பி எஸ் ஜி ரெங்கசாமி நாயுடு அவர்கள் இந்த தேவஸ்தானத்திற்கு டிரஸ்டியாக இருந்து நிர்வகித்துவரலாமென்று ஸ்ரீமான் வி ரெங்கசாமி நாயுடு அவர்களால் பிரேபனை செய்யப்பெற்று பூ. ர. கொண்டசாமி நாயுடு அவர்களால் ஆமோதிக்கப்பெற்று சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்த தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட ரூ 2800. 0. 0. ம் ஸ்ரீ பி எஸ் ஜி அண்சன்ஸ் அவர்களிடம் ரூ 1400. 0. 0 ம் பி. ஜி பி. ஏ. வி. ஆர். அன் கோ அவர்களிடம் ரூ 1400 0 0 ம் இருந்து வருவதால் மேலே கண்ட தொகைக்கு இப்பொழுது செலுத்தி வருகிறமாதிரி தலை யொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 16 ரூபா வீதம் செலுத்தி வரும் வட்டித் தொகையை இனிமேல் பிரதி மாதமும் கரிவரத தேவஸ்தான டிரஸ்டியாகிய பி. எஸ். ஜி ரங்கசாமி நாயுடு வசம்செலுத்தி வர வேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது.

மேலே கண்ட விஷயங்களை போர்டார் அவர்களுக்கு தெரிவித்து அங்கீகாரம் பெற வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

போகாயுடு, சோமசுந்தரம்பிள்ளை.

### சாக்கோட்டை பஜனை மடத்தில் பார்ப்பனீயம் ஒழிந்தது.

சாக்கோட்டையில்ஸ்ரீ ராமானுஜகூடத்தில் இதுகாறும் பூஜை செய்ய ஏற்படுத்தப்பட்டு வந்த பிராமணப் புரோகிதர் நீக்கப்பட்டு ஸ்ரீமான்கள் ஸ்கூல் மாஸ்டர் தீனதயாளுநாயுடு, நெல் வியாபாரம் பொன்னுசாமி நாயக்கர், மிராசுதார் மருதமுத்துமானி சுத்தியார் மிராசுதார் கலியபெருமாள் சுத்தியார் கு. பக்கிரிசாமி மானிசுத்தியார் மிராசுதார் கிருஷ்ணசாமி மானி சுத்தியார் ஆகிய டிரஸ்டிகளே ஆராதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தலைவர் ர. ரங்கசாமி நாயுடு,


சென்னையில்
குடி அரசு
கிடைக்கும்
முக்கியமான இடங்கள்

1. முனுசாமி, ஜெனரல்நியூஸ் ஏஜென்ஸி
பிராட்வே கார்னர்.
2. K. கண்ணன்--நியூஸ் ஏஜென்ஸி
கோனந்கப்ப நாயக்கன் தெருவு,
3. குப்புசாமி பிள்ளை
வெத்திலை பாக்கு கடை,
யானை கௌனி.
4. ஷண்முக முதலி,
அரிசி வியாபாரம்,
புரசைவாக்கம்.
5. எத்திராஜுலு முதலி,
வெதிலைபாக்கு கடை,
திருவல்லிக்கேணி.
6. ஜெகநாதமுதலி,
"பஸ்" ஸ்டேண்டு
புரசைவாக்கம்.
7. 'திராவிடன்' ஆபீஸ்,
மவுண்ட் ரோடு.

"திராவிடன்"
கிடைக்குமிடம்.

"திராவிடன்" பத்திரிகைகள் மதராஸ் சென்டிரல், எழும்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்ப்பேட்டை, சேலம், ஈரோடு, போத்தனூர், மாயவரம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, நாகபட்டணம் முதலிய ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புத்தகசாலைகளில் அரை அணா வீதம் கிடைக்கும்.

நோட்டீஸ்.

15, 20 வருஷங்கள் சென்ற வெள்ளை, வெட்டை, நீடித்த கிராணி, அதிசாரம் வயிற்றுப்போக்கு இவற்றை அதி ஆச்சரியமாகக் குணப்படுத்துகிறோம். நேரிலும் தபால் மூலமாகவும் மருந்து பெற்றுக்கொள்ளலாம், வியாதி விபரத்துடன் ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும், டாக்டர் ஆர், சேஷன் எல், எம், எஸ்(ஹோம்யோ கல்கத்தா) ஸ்ரீரங்கம் போஸ்டு, திருச்சி.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு பிரபவ ஹு தை மீ 30 உ

## அரசியல் நாணயம்.

சைமன் கமிஷன் பகிஷ்கார வேலை நிறுத்தத்தைப்பற்றி சென்ற வாரம் எழுதியிருந்தோம். இந்த ஒரு வாரமாய் அதைப்பற்றி தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் வயிறு வளர்ப்புப் பத்திரிகைகளும், பார்ப்பன பத்திரிகைகளும் சற்றும் மானம் ஈனம் என்பது இல்லாமல் சராமாரியாய் பொய்யையும் புளுகுகளையும் மனங்கொண்டவரையில் எழுதி பத்திரிகைகளை நிரப்பி வருகின்றன.

பொய் எழுதுபவைகளுக்கு எவ்வித தண்டனையும் இல்லை என்கிற காரணத்தாலும் பாமர ஜனங்களுக்கு உண்மையை எடுத்துக் கூறும் பத்திரிகைகள் அதிகமாக இல்லாததினாலும் தங்கள் அக்கிரமங்களை சுலபத்தில் யாரும் கண்டு பிடித்துக்கொள்ள முடியாது என்கின்ற எண்ணம் மேலும் மேலும் இவ்விழிதொழிலில் இறங்கிவாழ தைரியம் கொடுத்து வருகின்றது.

ஆனபோதிலும் சென்னை அரசியல் பத்திரிகைகள் என்பவை களிலேயே சில தம்மையும் அறியாமல் எழுதிவிட்ட சில குறிப்புகளை மாத்திரம் முதலில் இங்கு குறிப்பிடுகின்றோம். அதாவது

'சுதேசமித்திரனின்' 4ம் தேதி தலையங்கத்தில் குறிப்பிடுவதாவது "................இது வரையில் நமக்கெட்டியிருக்கும் செய்திகளில் சென்னை ஒன்றில் தான் துர் அதிர்ஷ்டவசத்தினால் அர்த்தாலின் மகிமையைக் குறைக்கக்கூடிய சம்பவங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது............................ ..........திறந்திருந்த கடைகளில் மறியல் செய்யவும் (அதாவது மூடும்படி.ப.—ர்) ஓடிக்கொண்டிருந்த போக்கு வரத்து சாதனங்களைத்தடைப் படுத்தவும் எத்தனித்த பிறகே தொல்லை விளைய ஆரம்பித்தது (யார்? காங்கிரஸ் தலைவர்களா தொண்டர்கள் ப.—ர்)........................அர்த்தாலின் கவுரவத்திற்கு குறைவு ஏற்பட்டு விட்டது. போலீஸ் கமிஷனரும் அவரது சகாக்களும் சீப்பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட்டும் அடக்கத்துடனும் பொருமையுடனும் நடந்து கொண்டது குறிப்பிடத் தக்கது அவர்கள் நிலைமைதவறி இருந்தால் அதிக மரணங்கள் ஏற்பட்டிருக்கும்' (அதாவது இதனால் சர்க்கார் யோக்கியமாகவே நடந்துகொண்டார்கள் என்று விளங்குகின்றது ப—ர்)

மற்றொருபார்ப்பனபத்திரிகையாகிய 'இந்து' பத்திரிகையும்தலைவர்கள்தோற்றுவிட்டார்கள் என்றும் சரியானபடி ஏற்பாடு செய்யவில்லையென்றும் தங்கள் யோக்கியத்துக்கு மீறின காரியத்தைச் செய்தார்கள் என்றும் இனி வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்றும் பொருள்பட தைரியமாய் எழுதிவிட்டது. (அதாவது. சர்க்கார் யோக்கியமாகவே நடந்துகொண்டார்கள் என்று விளங்குகின்றது ப-ர்) மற்றபடி பொதுவான பத்திரிகைகளாகிய நவசக்தி 8 தேதி பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறதாவது........... ........"வெள்ளிக்கிழமை காலையில் (அதாவது அர்ட்டால் தினதன்று ப-ர்) வழக்கம் போல் டிராம் வண்டிகள் ஓடின; மற்ற வண்டிகள் அங்கும் இங்கும் ஓடின. தொழில் சாலைகளில் வழக்கம் போல வேலை துவங்கப்பட்டது பலபெரிய வாணிப கூடங்கள் (அதாவது வியாபாரக் கடைகள் ப-ர்) திறக்கப்பட்டன ..................... நீதி மன்றங்களில் வழக்கு வாதம் வழக்கம்போல் நடத்தப்பட்டன. பச்சையப்பன் கல்லூரி தவிர மற்ற கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டன...... அன்று பத்து மணிவரை சென்னையின் காட்சி இதுவாகும்" என்று எழுதியிருக்கின்றது.

மற்றபடி 'சைபுல் இஸ்லாம்' 'தாருல் இஸ்லாம்' என்கின்ற மகமதிய சமூக பத்திரிகைகள் அர்த்தால் பெரிதும் காலித்தனத்தின் உதவியைக்கொண்டே நடத்த முயற்சிக்கப்பட்டதென்றும் அப்படி இருந்தும் பெரிய தோல்வியே அடைந்தென்றும் காட்டியிருக்கின்றது. இவைகள் தவிர பல முக்கியஸ்தர்களும் காங்கிரசின் நடவடிக்கையை கண்டித்து எழுதிவருகிறார்கள். தவிர கல்கத்தாவில் நடந்த காலித்தனத்திற்கும் அளவில்லை என்பதும் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே விளங்குகின்றது. வெளியூர்களில் நடந்ததாகச் சொல்வது அவ்வளவும் 100க்கு 99 முழுப் பொய்யாகவே இருக்கின்றது.

உதாரணமாக கோயம்புத்தூர் டவுனில் வேலை நிறுத்தம் நடந்ததாக சில அரசியல் பிழைப்பு பத்திரிகைகளில் காணப்படுகின்றன. ஆனால் அங்கு ஒரு சின்ன பார்ப்பனக் கடை கூட மூடப் படவில்லை என்றும் ஸ்ரீமான் ரத்னசபாபதி முதலியாரை வைவதற்காக அன்று மாலையில் மாத்திரம் சில பார்ப்பனக்காலிகள் ஒரு இடத்தில் கூடி வெகு சீக்கிரத்தில் கலைந்து விட்டார்கள் என்றும் சரியான தகவல் கிடைத்திருக்கின்றது. மற்றும் பல இடங்களில் இது போலவே கூட்டம் கூடிகத்தினதல்லாமல் யாரும் லக்ஷியம் செய்யவில்லை என்றும் பல இடங்களில் காங்கிரஸ் என்ற பெயரைக்கூட வாயில் உச்சரிப்பதற்கு பணமில்லாமல் இருந்ததென்றும் சில இடங்களில் சில காங்கிரஸ் காலிகளுக்குக்கபடிபுத்தி கற்பிக்கப் பட்டதென்றும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. பம்பாயைப்பொறுத்தவரையில் விசேஷ கலவரம் இல்லை. ஆனாலும் பஹிஷ்காரத்தை விட வரவேற்பு ஆடம்பரமே பலமாய் இருந்ததாக பார்ப்பனப் பத்திரிகைகளாலேயே தெரிய வருகின்றது. ஆகவே இவைகளினால் எந்த விதத்தில் வேலை நிறுத்தம் வெற்றி என்று சொல்ல இடமிருக்கின்றதோ தெரியவில்லை. புதிதாக மதம் மாறியவர்களுக்கு மதவேஷம் அதிகம் என்பதுபோல் "தமிழ்நாடு' பத்திரிகையும் அதன் ஆசிரியர் ஸ்ரீ வரதராஜுலுவும் மாத்திரம் இவ்வளவையும் லக்ஷியம் செய்யாமல் ஒரே அடியாய் புளுகுவதுடன் உண்மையை மறந்தாப் போல் வெளியிட்ட மித்திரன் மீதும் காய்ந்து விழுகின்றது. ஸ்ரீவரதராஜுலுவின் பத்திரிகைப் படிக்கும்அவரதுபேச்சுப் படிக்கும்பார்த்தாலே காலிகள் என்பவர்கள் வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் வேலை செய்தவர்களா பிரதிகூலமாய் வேலை செய்தவர்களா என்பது நன்றாய்விளங்கும். மோட்டார் பஸ்கள் மீதிலும் டிராம் வண்டிகள் மீதும் தெருவில் மோட்டார் வண்டியில் போனவர்கள் மீதும் கோர்ட்டுக்குப்போன வக்கீல்கள் மீதும் திறந்து வைக்கப்பட்டிருந்த கடைக்காரர்கள் மீதும் கல எறியப்பட்டதாகவும் காரி உமிழ்ந்ததாகவும் வாயில் வந்தபடி இழி மொழிகளால் பேசியதாகவும் ஸ்ரீவரதராஜுலு பத்திரிகை உள்பட எல்லா பத்திரிகையிலும் காணப்படுகின்றது. குறிப்பாய் வேண்டுமானால் ஆரிசன் கம்பெனி கொள்ளையிடப்பட்டதும்சர்க்கார்வக்கீலின்மோட்டார் வண்டி கொளுத்தப்பட்டதுமே போதுமானதாகும். மற்றும் ஐகோர்ட்டில் கலகம் செய்ததும் கோர்ட்டுக்கு போன வக்கீல்களை துன்புறுத்தியதும் இன்னும் மேலான சாட்சியமாகும் இந்த நிலையில் காலிகள் காங்கிரஸ்காரர்களா அல்லது பகிஷ்காரத்திற்கு எதிரிடையானவர்களா என்பதை யோசித்தால்முழுமூடனுக்கும் விளங்காமல் போகாது. தவிர ஸ்ரீவரதராஜுலுமோட்டார்மூலமவேலைநிறுத்தத்தை நடத்த சென்னை முழுதும் சுற்றினதாகவும் அடிக்கடி தன் வண்டியை பலர் வந்து மறித்ததாகவும் தான் வரதராஜுலு என்று தெரிவித்த உடன் தன்னை காலிகள் விட்டு விட்டு போய் விட்டதாகவும் தானே பல இடங்களில் எழுதிக் கொண்டிருக்கிறார். இதனால் ஸ்ரீ வரதராஜுலுவுக்கு ஒரு மோட்டார் இருப்பதாக பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்த இடமேற்பட்டாலும் இவரை வழிமறித்த காலிகள் வேலை நிறுத்தத்திற்கு எதிரிடையானவர்களா யிருந்திருந்தால் ஸ்ரீவரதராஜுலுவை சும்மா விட்டிருப்பார்களா என்பது யாருக்கும் விளங்காமல் போகாது. ஆகவே வரதராஜுலு என்றுதெரிந்த உடன் சும்மா விட்டு விட்டார்கள் என்பதாலேயே அக்காலிகள் காங்கிரசைச்சேர்

தவர்கள் என்பது விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

எந்த இடத்திலாவது மூடியிருந்த கடைக்காரனையாவது நிறுத்தி விட்ட எந்த வண்டிக்காரனையாவது திறக்கும் படியோ ஓட்டும்படியோ யாராவது தொந்திரவு செய்ததாக ஏற்பட்டால் அது மாத்திரம் வேலை நிறுத்தத்திற்கு விரோதமான கூட்டத்தாரின் செய்கை என்று சொல்லலாம் அப்படிக்கில்லாமல் தங்களை 'தலைவர்கள்' 'தலைவர்கள்' என்று தாங்களே ஒருவருக்கொருவர் மரியாதை செய்து கொண்டு பட்டம் சூட்டிக் கொண்டு காசு பணத்தை செலவு செய்து காலித்தனத்தை வளர்த்து விட்டு அவமானமும் தோல்வியும் ஏற்பட்ட பிறகு மேலும் மேலும் அவமானம் அடையத்தக்க மாதிரி முட்டாள் தனமாக ஊர் அறிந்த உண்மையை மறைத்து மறைத்து கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது தலைமைத்தனத்துக்கு அழகா? அல்லது மனுஷதனத்திற்கு அழகா என்று கேட்கின்றோம். யோக்கியர்களாயிருந்தால் ஆண்மையுள்ளவர்களாயிருந்தால் கடுகளவாவது சுயமரியாதையில் கவலையுடையவர்களாயிருந்தால் உண்மையை ஒப்புக்கொண்டு தவறிப் போனதற்கு உண்மையான காரணத்தைக் காட்டிவிட்டு மேலால் நடக்க வேண்டியதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் நடந்த தப்பிதங்களை மறைத்துவிட்டு மேலால் நடக்க வேண்டிய காரியங்களையும பயந்து கொண்டு நழுவ விட்டுவிட்டு 'அது அவன் தப்பு இது இவன் தப்பு' என்று ஜவாப்தாரித்தனத்தை எதிரிகளின் மீது போடுவது பேடித்தனமும் கடைந்தெடுத்த மானங்கெட்ட தனமும் ஆகுமா அல்லவா என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ்காரர்களோ வேலை நிறுத்தம் ஆரம்பித்த வீரப்புலிகளோ ஆண்பிள்ளைகளாய் இருந்தால் "போலீசார் வேலை நிறுத்தத்தை ஒழுங்காய் நடத்திக்கொடுக்கவில்லை" என்று சொல்வதற்கு கொஞ்சமாவது வெட்கப்பட்டிருக்கமாட்டார்களா என்று கேட்கின்றோம். "போலீசார் யோக்கியமாய் பொறுமையாய் புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டார்கள்" என்று சொல்லி விட்டு மறுபடியும் போலீசார் தக்க பந்தோபஸ்து எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுவது அறிவுடைமையாகுமா என்று யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. தவிர, '17-தேதி வேலை நிறுத்தத்திற்காக ஊர்வலத்தையும் மீட்டிங்குகளையும் விளம்பரங்களையும் நாங்களாகவே நிறுத்திவிட்டோம்' என்று ஸ்ரீ வரதராஜுலு சொல்லுகிறார் எழுதுகிறார். ஏன் நிறுத்திவிட்டார் என்று கேட்கின்றோம். ஒன்று சர்க்கார் 144 போடப்போகும் விஷயம் தெரிந்து பயந்து கொண்டு பயங்காளித்தனமாய் நிறுத்தி இருக்க வேண்டும். அல்லது இவைகளால் தான் கலவரங்கள் ஏற்பட்டது என்று முடிவு செய்து நிறுத்தி இருக்க வேண்டும். அல்லது வெளியில் தலைகாட்டுவதற்கும் மீட்டிங்கு போடுவதற்கும் தங்களுக்கு யோக்கியதையும் செல்வாக்கும் அற்றுப்போய் விட்டது என்பதை நன்றாய் அறிந்து நிறுத்தி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேறு காரணம் என்னவாயிருக்கக் கூடும்? என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் ஜனங்களுக்கு போதுமான உணர்ச்சி வந்துவிட்டது. யாருடைய முயற்சியும் இல்லாமல் தாமாகவே கடை மூடி விடுவார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்குமானால் "கடை அடைத்தவர்கள் மீதும் அடைக்கும்படி கட்டாயப்படுத்துகிறவர்கள் மீதும நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்" என்று சென்னையில் தண்டோரா அடித்ததை பார்த்துக்கொண்டும் 144 உத்திரவு போட்டதை வாங்கிக்கொண்டும ஜனங்களுக்கு தைரியம் சொல்லாமலும் உத்திரவுக்கு பயப்படாமலும் வெளியில் வந்து வேலை செய்யாமல் 'நாங்கள் 144-க்கு விரோதமாய் யாதொரு வேலையும் செய்வதில்லை என்று முன்னமேயே தீர்மானித்து விட்டோம்" என்று சொல்லுவதில் எவ்வளவு நாணயப் பொறுப்பும் ஆண்மையும் இருக்கின்றது என்பதைப் பாருங்கள். இது எது போல் இருக்கின்றதென்றால், ஒரு திருடன் தென்னை மரத்தில் தேங்காய் திருட ஏறிய போது, மரக்காரன் பார்த்துக்கொண்டதை உணர்ந்து திருடன் கீழே இறங்கி வரும் போது, மரக்காரன் திருடனைப் பார்த்து ஏதற்காக மரத்தின் மீது ஏறினாய் என்று கேட்டதற்கு, திருடன் கன்றுக்குட்டிக்கு புல்லுப் பிடுங்க ஏறியதாய்ச் சொல்ல, மரக்காரன் தென்னை மரத்தில் புல் ஏதென்று கேட்க, திருடன் அதனால் தான் பார்த்து விட்டு சும்மா இறங்கிவந்து விட்டேன் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முயற்சித்தது போல் இருக்கின்றது.

எப்படி இருந்தாலும் சைமன் கமிஷன் பகிஷ்காரமும் வேலை நிறுத்தமும பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள் என்பது மாத்திரம் இந்த வேலை நிறுத்தத்தினால் வெளியாய் விட்டதற்கு நாம் மிகுதியும் சந்தோஷமடைகின்றோம். அதாவது (1) ஸ்ரீமான் சத்தியமூர்த்தியே இந்த விஷயமறிந்து அன்று பார்ப்பனர்கள் யாரும் வெளியில் போகக் கூடாது என்று உத்திரவு போட்டு விட்டு தான்மாத்திரம் செக்ரிடரியேட் ஆபிசில் போய் ஒளிந்து கொண்டதும் (2) போலீஸ் உதவி கமிஷனராகிய ஒரு பார்ப்பனருடன் ஸ்ரீ சத்திய மூர்த்தி கலந்து பேசியதில் அவர் தன்னை வெளியில் வரவேண்டியதில்லை என்று சொன்னதாக ஸ்ரீ சத்திய மூர்த்தி தன்னுடைய சமாதானத்தில் குறித்திருப்பதும், (3) இதற்கு விரோதமாய் ஸ்ரீ வரதராஜுலு தான பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணத்தால் வெளியில் தாராளமாய் உலவினதும், (4) தன்னை வழிமறித்தவர்களிடம் தான வரதராஜுலு என்று சொல்லி தப்பித்துக்கொண்டதாக எழுதியிருப்பதும், (5) காங்கிரஸ் காலிகளே கோர்ட்டுக்குப்போய் பார்ப்பன வக்கீல்களைப் பார்த்து 'பார்ப்பனரல்லாதார்களாகிய எங்களை மாத்திரம் வேலை நிறுத்தம் செய்யும்படி சொல்லி விட்டு பார்ப்பனர்களாகிய நீங்கள் மாத்திரம் கோர்ட்டுக்கு போகலாமா' என்று கேட்டதாக பார்ப்பனப் பத்திரிகைகளில் காண்பதும், (6) சிற்சில இடங்களில் அதாவது திருவல்லிக்கேணி இரும்பு வாராவதி முதலிய இடங்களில் மீசை இல்லாதவர்களையும் பூணூல் போட்டவர்களையும் மறித்து உபத்திரவம் செய்ததாக பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே காண்பதாலும், (7) பார்ப்பன அட்வகேட் ஜனரலாகிய ஸ்ரீ டி. ஆர். வெங்கிட்டராமய்யர் போன்றவர்கள் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் அட்டகாசத்தால் தான் இம்மாதிரி கலகங்கள் நடந்தது என்று வருத்தப் பட்டுக்கொண்டதும் அவரும் தாக்கப்பட்டதாய் சொல்லப்படுவதும், மற்றும் பல காரியங்களும் வெளிப்பட்டு விட்டது. தவிர, (8) சர் சி. பி. ராமசாமி ஐயரின் குமாரர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் அதிக முயற்சி எடுத்துக்கொண்டதும், (9) கதர் வேலையைத் தவிர வேறு வேலை பார்ப்பதில்லை என்று சொல்லி வடக்கத்திய பிரபுக்களிடம் லக்ஷக்கணக்காய் பணம் வாங்கிவந்து வைத்துக்கொண்டு ஆசிரமம் என்றும் பேரால் ஆதிக்கம் செலுத்தி வரும் சி. ராஜகோபாலாச்சாரியாரும் பத்திரிகைகளில் வேலை நிறுத்தம் செய்யும்படி கோடு கட்டிய குறள் எழுதி வந்ததும் (10) அநேக கதர் கடைகளையெல்லாம் 3ம் தேதி மூடும்படி கடிதமெழுதச் செய்ததும் ஆகிய இவ்வளவு காரியங்கள் வெளிப்படையாய் நடந்ததோடு (11) பார்ப்பன அதிகாரிகள் அதாவது சட்டமெம்பர் ஐகோர்ட் ஜட்ஜி முதலானவர்களின் செல்வாக்குகள் வேலை நிறுத்தத்திற்கு உபயோகப்பட்டது என்று சொல்லத்தக்க பல ரகசிய காரியங்களும் போதுமானதாகும்.

தவிர இவ்வேலை நிறுத்தத்திற்கு விரோதமாய் வேலை செய்தவர்கள் இன்னார் என்று ஒரு வார்த்தையாவது இது வரை எந்த பத்திரிகையும் சொல்லவே இல்லை. கலகங்கள் நடந்ததாகவும் சொல்லத்தக்க ஆதாரங்களும் இல்லை. மாலை 5 மணி வரை வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் கலவரங்கள் நடந்திருப்பது மாத்திரம் விளங்குகின்றதே அல்லாமல் விரோதமாய் இன்ன காரியம் நடந்தது என்று ஒரு பத்திரிகையும் எழுதவில்லை. ஆனால் மாலையில் கூட்டத்திலும் பார்ப்பனத்தெருக்களிலும் பார்ப்பனரைக்கண்ட இடங்களிலும் கலகமானதாக எல்லாப் பத்திரிகைகளிலும் காணப்படுகின்றது. இது வாஸ்தவமாக இருக்க அநேக காரணங்கள் உண்டு. என்னவென்றால் பார்ப்பனரல்லாதார்களை மாத்திரம் வேலை நிறுத்தம் செய்யச்செய்து நஷ்டமடையும்படியும் கஷ்டமடையும்படியும் செய்து விட்டு பார்ப்பனர்கள் ஒரு நஷ்டமும் அடையாமல் ஒரு குஞ்சுகூட வெளியில் வராமல் தங்கள் அலுவல்களைச்செய்து கொண்டிருப்பதை பார்த்த வேலை நிறுத்தத்திற்கு அனுகூலமாய் இருந்த பார்ப்பனரல்லாத மக்கள் சாதாரணமாய் பார்ப்பனர்கள் மீது ஆத்திரப்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவர்களுக்கு புத்திகற்பிக்க வேண்டுமென்று நினைப்பதிலும் ஆச்சரியமில்லை. தேசத்தில தேசிய விஷயத்தில் அஹிம்சையை முக்கியமாக வைதது ஸ்ரீமான் காந்தி 5, 6 வருஷம் எவ்வளவோ வேலை செய்து வந்தும ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, குப்புசாமி முத

## கமிஷன் பகிஷ்காரம்.

இதுவரை நடந்த சம்பவங்களால் கமிஷன் பகிஷ்காரமென்பது அர்த்தமற்றதாய் விளங்குகின்றது என்பதும், சென்னை பம்பாய் முதலிய மாகாண பார்ப்பனரல்லாதார் இயக்கங்கள் முழுதும் கமிஷனிடம் ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றன என்பதும் விளங்கிவிட்டது. அதாவது ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஸ்ரீமான் கிருஷ்ண நாயர் அவர்கள் ஸ்டேட்மெண்டும் பம்பாய்ப் பார்ப்பனரல்லாதார் தீர்மானமும் பார்த்தவர்களுக்கு இனிது விளங்கும். மற்றபடி மகமதியத் தலைவர்களின் பெரும்பான்மை அபிப்பிராயமும் பத்திரிகைகளின் அபிப்பிராயமும் முழு ஒத்துழைப்பில் இருக்கின்றது. ஆதி இந்துக்களின் அபிப்பிராயமும் அதைவிட மீறி நிற்கின்றது. மற்றபடி பார்ப்பனர்களின் இயக்கம் என்று கருதப்பட்ட காங்கிரசை பொறுத்து மாத்திரம் சிலர் பகிஷ்காரப்பேச்சு பேசினாலும் காரியத்தில் கமிஷனுக்கு அனுகூலமாய் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. தவிர பார்ப்பனர்களின் முக்கியமான பகிஷ்கார எண்ணமெல்லாம் இந்தியாவிலிருக்கும் ஜாதித்திமிரும் பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளைக்காரருக்குத் தெரியக்கூடாது என்பது ஒன்றுமாத்திரமேயல்லாமல் வேறு கவலை ஒன்றும் பார்ப்பனர்களுக்கு இல்லை என்பது உறுதியாய் விட்டது. இனியாரும் அதைக் கேட்பதில்லை என்பது மாத்திரம் உறுதி.

தவிர இங்கிலாந்திலும் உள்ள வெள்ளைக்காரர்களுக்கு மிகுதியும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத்தான் இந்த பகிஷ்காரப்புரட்டு ஆரம்பித்திருக்கின்றார்கள் என்பதும் விளங்கி விட்டது. இதை அறிந்தே நமது பார்ப்பனர்கள் வெளிநாட்டுப் பிரசாரம் செய்யவேண்டும் என்று இப்போதே ஆரம்பித்து விட்டார்கள். இந்தியாவின் சுயநிர்ணயத்தை நிர்ணயிப்பதற்கு வெள்ளைக்காரர்களுக்கு பாத்தியமில்லை என்றும் அப்படி பாத்தியமிருப்பதாய்ச் சொல்லுவது நமது சுயமரியாதைக்கு குறைவு என்றும் சொல்லிக்கொண்டு திரியும் பார்ப்பனர்கள் இப்போது வெள்ளைக்காரர் நாட்டில் நமது பிரசாரம் செய்யவேண்டுமென்பதின் இரகசியம் என்ன என்பதை கவனித்துப்பார்க்கும்படி பொது மக்களைவேண்டுகிறோம்.

எது எப்படியானாலும் மகமதியர்கள் இப்போதுள்ள தங்கள் தனித்தொகுதி பிரதிநிதித்துவத்தை இழந்து விடாமல் தாலூக்கா போர்டுஜில்லா போர்ட்டு,முனிசிபாலிட்டி பஞ்சாயத்து முதலியவைகளிலும்தனி தொகுதி பிரதி நிதித்துவம் பெற இந்த சமயத்தை உபயோகித்துக்கொள்ளும் படி உஷாராயிருக்கவேண்டும் என்று சொல்லுவதோடு ஆதித்திராவிடர்கள் என்பவர்களுக்கும் இந்த சமயம் தவறினால் மற்றபடி அவர்களுக்கு இனி வெகு நாளைக்கு விமோசனமில்லையென்றும் உறுதியாய்ச்சொல்லுகின்றோம். இந்த கமிஷனால் ஏதாவதுவேண்டுமா என்று கேட்கப்படுமானால் முதலாவது தீண்டாதார் எனப்படுவோருக்கு மனிதத் தன்மை உண்டாக்கினால் அதுவே நமக்கு போதுமானது என்று சொல்லுவோம் ஆதலால் அவர்கள் இந்த சமயத்தில் கொஞ்சமும் ஏமாந்து விடாமல் உஷாராயிருக்க வேண்டும் பார்ப்பனரல்லாதாரும் தலைவர்களை நம்பிக் கொண்டு ஏமாந்து விடாமல் தாராளமாய் தங்கள் குறைகள் கமிஷனுக்கு எட்டும் படி நடந்து கொள்ள வேண்டும் இதனால் அதிகமான லாபம் கிடைத்து விடாது என்று நாம் நம்பினாலும் பின்னால் நாம் செய்யப் போகும் கிளர்ச்சிக்கு நமது குறைகளை நாம் சர்க்காருக்கு தெரிவித்து விட்டுத்தான் கடைசி ஆயுதத்தை எடுக்க நேர்ந்தது என்பதையாவது உலகம் அறிய இது ஒரு சந்தர்ப்பமாகும் தவிரவும் நமது நிலை சில வெள்ளைக்காரருக்குத் தெரியாது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளவும் வேண்டும், உதாரணமாக கல்கத்தாவில் உள்ள காங்கிரஸ் தலைவரான கோஸ்வாமி என்பவரிடம் சென்ற மாதம் நமது நிலையைச் சொன்ன காலத்தில் "அப்படியா" "வாஸ்தவமா" என்று இரண்டு மூன்று முறை கேட்டார். பக்கத்து மாகாணத்துக்காரருக்கு தெரியாத விஷயம் சீமையில் இருப்பவனுக்கு தெரியும் என்று சொல்லுவது சரியாகாது.

டாக்டர் நாயர் சீமையில் இருக்கும் பொழுது பார்ப்பனரல்லாதாருக்கு பெரிய உத்தியோகங்கள இல்லையென்று ஒரு வெள்ளைக்கார பார்லி மெண்ட் மெம்பரிடம் நாயர் சொன்னபோது மிஸ்டர் B. N சர்மா "இந்திய நிர்வாக சபையில் இருக்கிறாரே அது போதாதா" என்று கேட்டாராம், எனவே ஸ்ரீமான் B. N சர்மா பார்ப்பனர் அல்லவா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை என்றுவது அலலது நமது நாட்டு பார்ப்பனர்கள் அவரைப் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிவைத்து ஏமாற்றி இருக்கவேண்டுமென்றுவது தான் நாம் நினைத்தாக வேண்டும். ஆதலால் பார்ப்பனர்களின் அக்கிரமங்களை தாராளமாய் இந்தசமயம் சொல்லி விடுவதோடு மனுதர்ம சாஸ்திரத்தையும் சமர்ப்பித்து விடவேண்டும்.

இதனால் நமது சுயமரியாதைக்கு யாதொரு கெடுதியும் வந்து விடாது என்பது மாத்திரம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

## இது கமிஷனுக்கு தெரியவேண்டாமா?

மதுராந்தகத்தில் சமீபத்தில் நடந்த நாடகத்திற்காக போடப்பட்ட ஒரு துண்டு விளம்பரத்தின் அடியில் 'பஞ்சமர்களுக்கு டிக்கட்டு கொடுக்கப்பட மாட்டாது. பிராம்மண ஸ்திரீகளுக்கு தனி இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்குகாரணம் அந்த ஊர் சேர்மன் இந்த நிபந்தனையின் பேரிலேயே நாடகக் கொட்டகைக்கு லைசென்சு கொடுத்திருக்கிறாராம். துண்டு விளம்பரம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. கூத்தாடிப் பெண்களும் கூத்தாடி ஆண்களும் கூடி கூத்தாடுகிற இடத்தில்கூட ஆதி திராவிடர்கள் போகக் கூடாது என்பதும், அங்கு கண்ணே பெண்ணே என்று பேசிக்கொண்டு மூக்கையும் காதையும் கன்னத்தையும் கடித்துக்கொண்டு விளையாடுவதைப் பார்க்கப்போகும் பார்ப்பனப்பெண்களுக்கும் கூடதனி இடம் ஒதுக்கித்தருவது என்பதும் பார்ப்பன ஆதிக்கத்தை காட்டுகின்றதா இல்லையா என்று கேட்பதோடு இது சைமன் கமிஷனுக்கு தெரியவேண்டாமா என்று கேட்கின்றோம்.

## சங்காரச்சாரி மடத்து ஸ்ரீமுகம்.

பொட்டுக்கட்டுவதை ஒழிக்கவேண்டும் என்று ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்களால கொண்டுவரப்பட்ட மசோதாவானது இந்து மதத்திற்கு விரோதமென்றும் அதை இந்துக்கள் நிறைவேற்ற விடக்கூடாது என்றும் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடத்தில் தீர்மானம் செய்து சிஷ்ய கோடிகளுக்கு விநியோகிக்கப்பட்டு இருக்கின்றதாம். இந்த மாதிரியான இந்து மதத்தின் பெருமையை கமிஷனுக்கு தெரிவிக்க வேண்டாமா?

## பரிதாபம்.

ஸ்ரீ சத்திய மூர்த்தியை இது சமயம் பார்ப்பனர்கள் கை விட்டுவிட்டார்கள். ஏனென்றால் அவரால் 2, 3 மாதத்திற்கு முன்பு ஒரு பார்ப்பனருக்கு மாதம் 500 ரூ. சம்பளம் உள்ள வேலை 28 வருஷம் சர்வீஸ் ஆன பிறகு பிஞ்சின் வாங்கும் போது டிஸ்மிஸ் ஆகிவிட்டது. வேலை நிறுத்தத்தில் பல பார்ப்பனருக்கு அடி விழுந்து விட்டது, இதனால் எல்லோரும் இதுசமயம் அவரை வெறுத்து விட்டார்கள்.

## ஸ்ரீ நாயக்கர்.

ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் வியாழக்கிழமை இரவு சென்னைக்குப் போயிருக்கிறார். 2, 3 நாளையில் திரும்பி வருவார்.

---

லியார், அண்ணாமலைமுதலியார் வரதராஜலு, ஷாபி மகம்மது, அமீத்கான், இவர்களால் ஹிம்சையே தாண்டவமாடும் படியான நிலைமை ஏற்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் போன்றோர்: 'கிளப்பி விடத்தான் முடியும் சர்க்காரார் தான் அதை அடக்கவேண்டும்' என்று பொருள்படச் சொல்லுவது ஒன்றே போதுமானதாகும் நாம் கடைசியாக பார்ப்பனர்களுக்குச் சொல்லுவதென்னவென்றால் சென்னைக்காலித்தனம் மற்ற இடங்களில் பரவாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்தபடி லக்ஷியம் செய்யாமல் தங்கள் தந்திரங்களினாலும் பணத்திமிரினாலும் பார்ப்பனரல்லாதாரை சரிப்படுத்திக்கொண்டு பார்ப்பனரல்லாதார் மீது ஏவி விடுவதன் மூலம் தங்கள் காரியங்களைச் செய்துகொள்ளலாம் என்று இன்னும் நினைப்பார்களானால் மாலை 5 மணி வரையில் தான் பார்ப்பனரல்லாதார் மீது பாய்ந்து சிறுக்கு கெடுதிவிளைவிக்கக்கூடுமே யொழிய உணமை விளங்கிய வுடன இருட்டில் அவர்கள் மீதே திரும்பிப்பாயும் எனகிற எண்ணத்தை இனியாவது கருத்தில் கொண்டு ஜாக்கிரதையாய் இருக்கும்படி எச்சரிக்கைசெய்வதோடுமுடத்தனத்துக்கு தலை நமஸ்காரம் மோசம் போய்விடாதீர்கள் என்று சிநேக முறையில் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

8ம் பக்கத் தொடர்ச்சி

...டது தான் ஆகவேண்டும் தவிர ஔவை பிராட்டியார் பெயராலோ வள்ளுவர் பெயராலேயோ சொல்லப்பட்ட நீதிகளை ஆக்கிய கர்த்தர்கள் நம்மைப் போன்ற மனிதத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை முதலாவதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்? இந்த இடத்தில் தெய்வத்தன்மைகள் என்று சொல்லப்படுவதை அதாவது மனிதத்தன்மைக்கு மேற்பட்டது என்பது எதையும் மூட்டை கட்டி வேறாக வைத்து விட்டு பார்த்தால் தான் உண்மை விளங்கும் அப்படிக் கில்லாவிட்டால் யாரும் எதையும் சொல்ல இடமேற்பட்டு விடும். அப்படிப் பார்ப்போமானால் தான் இவர்கள் இப்படிச்சொன்னதற்கும் நியாயம கிடைக்கும், அதாவது அந்தக் காலத்திய நிலைமைக்கு யாராயிருந்தாலும் நீதி இப்படித்தான் சொல்லி இருக்க முடியும் என்கின்ற முடிவு காணலாம். எப்படி என்றால் கம்பர் அறிவுத்திறமுடைய கவி என்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்காது ஆனாலும் அப்படிப்பட்ட கம்பர் ராமாயணம் பாடினார் என்றால் ஆரியர் செல்வாக்கு காலத்தில் ஆரிய ஆதிக்கத்தில் மக்களுக்கு உணர்ச்சி உள்ள காலத்தில்பாடியதானதால் அது வால்மீகி உரைத்த கருத்துக்களை மாற்றி அதிலுள்ள அருவருப்புகளை நீக்கி ஆரியாகளுக்கேமுழு உயர்வையும் ஆதிக்கத்தையும் வைத்துமக்கள்கொண்டாடும்படி பாடியிருக்கின்றார். அதுபோலவே இப்போதும்கூட எவ்வளவு அறிவுமுதிர்ச்சியும் ஆராய்ச்சி முதிர்சியும் பலருக்கு இருந்தாலும் ஆரிய ஆதிக்கத்தை மறுப்பதற்கு பயப்படுகின்றார்கள். ஆரிய உயர்வையே பேசுகின்றார்கள் காரணம் ஆசிரியருக்குப் பயந்தல்ல வென்றும் சொல்லிக் கொள்ளலாம. மற்றென்னையே வெனில் ஆரியப் பழக்க வழக்கமும் ஆரியர்கதைகளையே படிப்பதும் ஆரிய ஆதிக்கத்திற்கு ஏற்படுத்தின கடவுள்தன்மைகளையே வணங்கி வருவதும் ஆரியக்கதையை ஆதரித்து பாடுவதும் எழுதுவதும் ஆகிய குணங்களே ஆகும். எனவே இம்முறையில் குழந்தைப் பருவ முதல் வளர்ந்த சரீரத்தின் ரத்தத்தின் மூலமாகவும் மயிர்க்கால் மூலமாகவும் ஆரியத்தன்மையை ஏற்றுக்கொண்டு மூளையை நிரப்பிவைத்திருப்பவர்கள் வேறு என்ன செய்யக்கூடும். ஆதலால் அவர்கள் பரிசுத்த தன்மையும் மேன்மையும் உற்றவர்களானால் அக்காலத்திற்கேற்க கூறினார் என்பதோடு முடித்து விடுவதன்று, அப்படிக்கில்லாமல் எக்காலத்திற்கும் ஏற்கவேண்டிய தென்போமாயின் அவைகள் குற்றம் குற்றமே. நெற்றிக்கண்ணைக்காட்டினாலும் குற்றமே தான்.

பின்பு ஸ்ரீமான் முதலியார் சமத்துவம் என்பது பற்றி என்ன என்னமோ அவசியமில்லாத அநேகவற்றை சொல்லுகின்றார். அதைப்பற்றி இங்கு இதுசமயம் ஒரு விவகாரமும் வைத்துக்கொள்ள அவ்வளவு அவசியமில்லை. ஆனால் கடைசியாக அவர் குறிப்பிடும் சமத்துவகொள்கையையாவது எடுத்துப்பார்ப்போமானால் அதிலும் முற்றும் முறையாய் சொல்லாமல் நழுவிவிட்டார். அதாவது "பெண்மக்கள் தமது உரிமையையும், தேவையையும் ஆண்மக்கள் தடையில்லாயலும், ஆண்மக்கள் தமதுரிமைகளையும் தேவைகளையும் பெண்ணின் தடையின்றியும் அவர்களுக்குத் துன்பமில்லாமலும் பெறுதலும் ஒருவர்க்கொருவர் உதவி செய்துவாழ்வதும் ஆண் பெண் சமத்துவமாகும்" என்று சொல்லுகிறார்.

ஆனால் அதே மூச்சில் "ஆண் உரிமை யாது, பெண் உரிமையாது. அன்னாரின் தனித்தனி தேவைகள் என்பவையாவைஎன்பதைப்பற்றி ஆராய்வது வேறொன்று விரித்தலாகும்" என்று சொல்லி விட்டார.

இவ்வியாசத்தின் விவகாரத்தின் ஜீவ நாடியே ஆண் உரிமை என்ன? பெண் உரிமை என்ன? இவ்விரண்டிற்கும் ஏன் வித்தியாசம் இருக்கவேண்டும், என்பதே யாகும். அப்படி இருக்க ஸ்ரீ முதலியார் அதை ஆராய்வது வேறொன்றுவிரித்தல் என்னும் குற்றமாகிவிடும் என்பது உள்ளதை விரிக்கப்பயந்து மறைத்தல் என்கின்ற குற்றத்திற்கு ஆளாகுமே தவிரவேறில்லை என்று சொல்ல வருந்துகிறோம்.

தவிர "ஆணின் தன்மை, வீரம், வன்மை கோபம், ஆளுந்திறம் கொண்டு விளங்குகின்றது" என்றும் "பெண்ணின் தன்மை, அன்பு, மென்மை, சாந்தம் பேணுந்திறம் கொண்டு விளங்குகின்றது" என்றும் சொல்கின்றார், ஸ்ரீ பரமசிவ முதலியாரின் இம் முடிவுதான் திருவள்ளுவருக்கு வக்காலத்துப் பெற்று மறுப்பெழுத முன்வரச்செய்து விட்டதென்பது இப்போது நமக்கு நன்றாய் விளங்குகின்றது.

வன்மை; கோபம்; ஆளுந்திரம்; ஆண்களுக்குச்சொந்தமென்றும், சாந்தம்; அமைதிபேணுந்திரம் பெண்ணுக்குச்சொந்த மென்றும் சொல்வதானதுவீரம்; வன்மை; கோபம்; ஆளுந்திறம் புலிக்குச் சொந்தமென்றும், சாந்தம் அமைதி; பேணுந்திறம் ஆட்டுக்குச் சொந்தமென்றும் சொல்வது போன்றதே ஒழிய வேறில்லை. நாம் வேண்டும் பெண் உரிமை என்பது என்ன வெனில் ஆணைப்போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக்கொள்ளவேண்டும், என்பதேயாகும்.

அன்றியும் மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலருக்கும் ஸ்ரீ முதலியார் குறிப்பிட்ட இருபாலார் குணங்களும சமமாய் இருக்க வேண்டும் என்பதும் நமது கருத்தாகும். இருபாலுக்கும் சமமாகவே இருக்க இயற்கையில் இடமும் இருக்கின்றது. ஆனால் அது செயற்கையில் ஆண்களின் சுயநலத்தால் சூழ்ச்சியால் மாறுபட்டு வருகின்றது,

கர்ப்பமாகி பத்து மாதம் சுமந்து பிள்ளை பெறுகின்ற குணம் பெண்களுக்கு இருப்பதாலேயே பெண்கள் நிலை ஆண்களைவிட எவ்விதத்திலும் அதாவது வீரம்; கோபம், ஆளுந்திரம்; வன்மை முதலியவைகளில் மாறுபட்டு விடவேண்டியதில்லை என்றே சொல்வோம். கர்ப்பர் தரித்து பிள்ளை பெறுத காரணத்தாலேயே ஆண்மக்களுக்கு அன்பும் சாந்தமும்பேணுந்திறமும் பெண்களைவிட மாறுபட்டதாகிவிடாதென்றும் சொல்லுவோம்.

உண்மையான காதலுக்கு மதிப்புக்கொடுப்போமானால் உண்மையான காதல் இருக்குமேயானால் பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்று தவிர மற்ற காரியங்கள் இருபாலருக்கும் ஒன்றுபோலவே இருக்கும் என்பது உறுதி.

தவிர தற்கொண்டான் என்பதற்கு அன்பைக்கொண்டவன் என்கின்ற பொருளை வருவித்துக்கொள்ளுவது இங்கு வள்ளுவருக்கு காப்புச்செய்யக் கருதியதாகுமே யல்லாமல் குறளுக்கு நீதி செய்ததாகாது.

அன்றியும் பெண்ணினிடமிருந்து ஆண் அறிய வேண்டிய குணம் இல்லை என்பதும் அப்படி இருந்தால் 'தற்கொண்டாள்' என்பதாக சொல்லலாம் என்பதும் பொறுத்தமற்றதென்றே சொல்லலாம்.

அதுபோலவே 'தொழுதெழுவதையும்' ஆணுக்கு குறிப்பிட நியதி இல்லை என்பதும் பொருத்தமற்றதே யாகும். பெண்ணை கொள்ள ஆணுக்கு உரிமை இருந்தால் ஆணைக்கொள்ள பெண்ணுக்கு உரிமை வேண்டும். ஆணைத்தொழுதெழ பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால் பெண்ணைத்தொழுதெழ ஆணுக்கு நிபந்தனை இருக்கவேண்டும். இதுதான் சம உரிமை என்பது.

இஃதில்லாதது எதுவானாலும் வன்மையும் கோபமுமே அல்லாமல் வைததல்ல என்றேசொல்லிவிடுவோம்.

தவிர ஸ்ரீ முதலியார் அவர்கள் குறளில் ஆணகளுக்கும் வள்ளுவர் கற்பு கூறியிருப்பதாக சொல்லுகின்றார். இருக்கலாம் ஆனாலும் பெண்களுக்கு கூறியதுபோல் இல்லை என்றுதான் சொல்லுகிறோம்- அதாவது ஆண்களின் கற்புக்கு ஸ்ரீ முதலியார் அவர்கள் இரண்டுகுறள்களை எடுத்துக்காட்டாக கூறியிருக்கிறார். அதாவது

'சிறைகாக்கும காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை'

'நிறைநெஞ்சமில்லவர் தோய்வர் பிற நெஞ்
சிற் பேணிப்புணர்பவர் தோள்'

ஆண்கள் கற்பை வலியுறுத்த கூறியதாகக் கூறுகிறார் போல் காண்கின்றது. இவைகள் அதற்காக கூறியதல்ல என்பது நமது அபிப்பிராயம்.

அதாவது முதற் குறளுக்கு காவலினால் பெண்கள் கற்பாயிருப்பதால் பயனில்லை. பெண்கள் தாங்களாகவே கற்பாயிருக்க வேண்டும் என்பது தான் கருத்து என்றுகருதுகிறோம்.

இரண்டாவது குறள் விலைமாதரைப் புணர்கின்றவர்க்கு கூறிய பழிப்புரையே அல்லாமல் காதல் கொண்ட மற்றப் பெண்களைக் கூடித்திரியும் ஆண்களைக் குறித்து கூறியதல்ல என்பது நமதபிப்பிராயம். நிறை என்கின்ற வார்த்தை மாத்திரம் காணப்படுகின்றதே தவிர நிர்ப்பந்தமில்லை.

ஆகவே இருபாலர்க்கும் சம நிபந்தனை குறளில் இல்லை என்பதற்கு மற்றும் பல குறள்களையும் நாம் கூறக்கூடும்.

தவிர கடைசியாக ஸ்ரீ முதலியார் நமக்கு உறுத்தும் அறிவுக்கு நாம் அவருக்கு நன்றி கூறக் கடைப்பட்டிருக்கின்றோம். அவர் விரும்புவது போலவே ஆன்றோர் நூல்களில் ஐயம் தோன்றும் இடங்களில் ஐய வினாவாகவே எழுதி வருகிறோம். சில விஷயங்களில் தவறிஇருந்தாலும் இனி அப்படி

யே எழுத விழைகின்றோம். ஆனால் இக் கற்பு விஷயத்தில் நாம் குறிப்பிட்ட குறளின் கருத்தில் நமக்கு ஐயமில்லை என்று கருதுவதோடு மற்றும் சில அறிஞர்களின் கருத்தையும் பெற்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மற்றும் குறள் விஷயத்திலும் குறளாசிரியர் விஷயத்திலும் நாம் கொண்டுள்ள பக்தி ஸ்ரீ முதலியார் கொண்டுள்ள பக்திக்கு மீறியதல்லவானாலும் குறைந்ததல்ல வென்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அதற்கு அநேக சான்றுகள் உண்டு. மற்றபடி ஸ்ரீ முதலியார் குறிப்பிட்ட கடைசி குறள்கள் இரண்டையும் பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில் சரியென்று பட்டதைச் சொல்லும் தன்மை எவனிடமிருந்தாலும் அவன் இக்குறள்கள் மாத்திரமல்ல இது போன்ற வசைகள் பலவற்றிற்கும் மற்றும் அநேக காரியங்களுக்கும் தயாராயிருக்கவேண்டியவன் தான என்கின்ற முடிவால் கவலைப்படவில்லை.

---


## சாரதையின் தந்திரம்.

### முதலிய கதைகள்

இன்பத் தமிழ் நடையில் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட எட்டு சிறு கதைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன அவை வருமாறு:- 1 சாரதியின் தந்திரம் 2 குழிநிலம் 3 சுபத்திரையின் சகோதரன் 4 காங்கிரஸ் ஸ்பெஷயில் கோரசம்பவம் 5 தற்கொலை 6 விஷ மந்திரம் 7 நம்பர் 888. 8 கவர்னர் விஜயம் ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் உயரிய நோக்கத்தை உட்பொருளாகக் கொண்டது. இன்று இப்புத்தகம் ஒன்று நீங்கள் வாங்கினால். அதற்காக உங்கள் வாணாள்முழுதும் மகிழ்ச்சியடைவீர்கள் விலை அணா 12

'குடி அரசு'......... இது புராணக்கதையன்று ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு ஆங்கில அநாசசாரங்களைப் போதிக்கும் நாவல் போன்றது மன்று தற்சமயம் நம் நாடு இருக்கும் நிலையை விளக்கி அதைச் சீர் திருத்தும் நோக்கம் கொண்டு உயர்ந்த கற்பனைகளோடு ஒவ்வொரு கதையும் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

குமரன்......... கதையின் போக்கு, தமிழின் சுவை, கொள்கைகளின் சிறப்பு ஆகிய மூன்றினையும் ஒருங்கே பெற்றுள்ள இக்கதைகளை ஒவ்வொருவரும் படிக்கவேண்டியதவசியமாகும்.

சரஸ்வதி பிரசுராலயம்,
மயிலாப்பூர், சென்னை.


---


## ஞான உதயம்.

### ஆயத்தம், சோற்பம்,, முந்துங்கள்,,,
### (இது ஓர் அநுதின தியானம்)

பக்தர் அங்கீகரித்தது.

பாலர்முதல் விருத்தர்வரை சகலரும் தியானித்து தெய்வ கிருபா கடாக்ஷத்தைப் பெறலாம். பக்தரச இனியவாக்கியங்களாலானது. பெருந்துக்கங்களை மாற்றியது. இதன்பலன் ஒன்றுய் அனுப்புவோம். வெள்ளை திக்கார்டில் சுத்தமாய் சித்திர வர்ண அழகாய் 9 ... 6. அங், அளவுள்ளது, 1, கார்டு விலை, 0—4—0, செலவு 0—3—0. 5, க்கு 1, கமிஷன் முன்பணமும் தபால் லேபில்களும் அனுப்பலாம். விலாசம்

கா. மதுரம், சந்தோஷம் (உபா)
கட்டளை, பாலாமடை போஸ்டு
திருநெல்வேலி ஜில்லா.





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

### பழனி சி. எம். சாமி

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இரைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இச்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரண பழைய பலம் ஏற்பட்டு வியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெமையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15 ரூ
,, ,, நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.
பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூ அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

### சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை


## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம்.

### 1927 ௵ ஆகஸ்டு ௴ 19தேதியில் கூடிய செய்த தீர்மானங்கள்

எஸ் பி சி ஏ இன்ஸ்பெக்டர்களால் சார்ஜ் செய் செய்யப்பட்டு அபராதம் போடப்பட்ட பிராணிகளில், வெளியூர் பிராணிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டதன் பேரில் அவைகளை சிகிச்சை செய்ய கால் நடை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும்படி கட்டாயப்படுத்தாமல் சொந்தக்காரன் இஷ்டம் போல் செய்து கொள்ள விட்டு விடும்படி உத்திரவு செய்ய வேணுமாய் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

கால் நடை தீவனத்துக்கும், கிணறுகள் வெட்டுவதற்கும் அதிகமான சர்க்கார் கடன் இச்சமயம் அவசியமாயிருப்பதால் அதிகாரிகளுக்கு தெரியபடுத்த வேண்டும்.

நீர்ப்பாசன நிர்வாகங்களில் அனுபவ முள்ள பப்ளிக் வொர்க்ஸ் டிபார்டு மெண்டு அதிகாரிகளே எல்லா மைனர் மேஜர் நீர்ப்பாசனங்களின் ஆட்சி நிர்வாகங்களை ஏற்றுக் கொண்டு நடத்தச் செய்ய வேண்டும்.

நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார்
அக்கிராசனர்.

---

## வாசகசாலை ஆண்டுவிழா.

தூத்துக்குடி ஸ்ரீமான் மா வே சண்முகவேல் நாடார் அவர்கள் ஞாபகார்த்த வாசகசாலையின் இரண்டாவது ஆண்டு விழா 12-2-28 ௳ ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி கதர் தொண்டர் திருவாளர் பொ திருசுந்தரம் பிள்ளை எம் ஏ பி எல் அவர்களின் தலைமையில் காரைப் பேட்டையில் அமைத்திருக்கும் பந்தலில் நடைபெறும்.

---


## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

## மலாய நாட்டில்

### 'சுயமரியாதைத் திருமணங்கள்.

இம்மலாய் நாட்டின் தலைநகராய் விளங்கும் சிங்கப்பூரின் கண் வதியும் சுயமரியாதை வீரரும் குடி அரசு அபிமானியுமாகிய கோப்ரல் திருவாளர் கே சதாசிவம்பிள்ளை அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி மீனம்பாளுக்கும் திருவாளர் ம இராமசாமி பிள்ளை குமாரர் சிரஞ்சீவி கிருஷ்ணசாமி பிள்ளைக்கும் 27-1.28 தேதி ஆராய்ச்சியாளரும் எவ்வித இடையூறுக்கும் அஞ்சாது சுயமரியாதை உணர்வை மக்களிடை போதித்து வருபவரும் குடி அரசு தொண்டருமாகிய திருவாளர்கள் கா தாமோதரம் பிள்ளை வ ரா சிவரூப பிள்ளை ஆகியவர்களால் அவ்விவாவகத்திற்கு வந்திருந்தோர் அனைவரும் சுயமரியாதையில் ஈடுபடும்முறைப்படி விவாகம் இனிதே நடத்தி வைக்கப் பட்டது. விவாகம் முடிந்ததும் "குடி அரசு" அபிமானியாகிய திருவாளர் கோ மருதமுத்து (இண்டியன் எலிமெண்டரிஸ்கூல் பிரின்ஸ்பால்] அவர்கள் சுயமரியாதை தத்துவத்தைப்பற்றியும் மதச்சடங்குகளின் பேரால் பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றி வரும் தன்மையையும் அதனால் நாம் அடையும் இன்னல் இன்னின்னவைகள் என்பதையும் ஆதலால் இப்பார்ப்பன கட்டுப்பாடினின்று நாம் வெளிபேற வேண்டிய அவசியத்தைப் பற்றியும் இப்பார்ப்பன கட்டுப்பாடு பண்டு தொண்டு நம் மக்களிடம் வேரூன்றி யிருப்பதையும் இதினின்று மக்கள் வெளிப்பட வேண்டு மென்றே அந்நாளிலேயே புத்தர் பெருமான் சுயமரியாதையியக்கத்தை தோற்று வித்தார் என்றும் பார்ப்பனர்களின் கொடுமைகள் இன்னின்னவைகள் என்று கபிலர் அகவலில் சங்கோபங்கயாய் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் ஆதலால் தமிழ் மக்கள் யாவரும் சுயமரியாதை இயக்கத்திலீடு பட்டு சுயமரியாதை யடையவேண்டியது ஒவ்வொரு மக்களின் கடமை என்றும் இவ்விஷயங்களை ஒவ்வொருவரும் தனித்தனியே நேர்மையுடன் சிந்தித்தால் சுயமரியாதையில் ஈடு படாமலிருக்கமுடியாதென்பதையும் அநேக மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டி உபந்நியசித்ததுடன் இவ்வூரில் இதற்கு வழிகாட்டியாக நின்று தன் திருக்குமாரன் சிரஞ்சீவி இராஜகோபால் பிள்ளைக்கும் திருவாளர் சு பெருமாள் நாயக்கர்குமாரத்தி சௌபாக்கியவதி கோவிந்தம்மாளுக்கும் 9-6-27 ல திருவாளர் கா. தாமோதரம் பிள்ளை சிவரூப பிள்ளை இவர்களைக் கொண்டு கதர்க் கல்யாணம் நடத்திவைத்ததுடன் இன்றுதன்திருக்குமார்த்திக்கும் அம்முறையிலேயே விவாகத்தை நடத்தியிருப்பதைப் பெரிதும் பாராட்டியதுடன் மணமகன் திருவாளர் கிருஷ்ணசாமி பிள்ளையின்கீழிருந்து வேலை பாாகரும் மேசனர்களால் மணமகனுக்கு பவுன் காசிமாலை ஒன்று இனமளிக்கப் பட்டது.

பிறகு 29-1:28 தேதி ஞாயிற்றுக்கிழமை திருவாளர் கிருஷ்ணசாமி அவர்களின் குமாரர் சிரஞ்சீவி சதாசிவத்துக்கும் கோவிந்தசாமி அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி லக்ஷிமியம்மாளுக்கும் மேடி திருவாளர்கள் கா தாமோதரம் பிள்ளை வ ரா சிவரூய பிள்ளை இவர்களால்சுயமரியாதைமுறைப் படி இனிதேவிவாகம் நடத்தி வைக்கப்பட்டது.

மேடி திருமணங்களுக்கு இவ்வூர் பிரமுகர்களாகிய திருவாளர்கள் உ ருமசாமி நாடார் பெ, கோவிந்தசாமி பிள்ளை நா ரு கோவிந்தசாமி பிள்ளை கோ மருதமுத்து சோமு முதலியார் [க சொ அ சொ பிரதர்ஸ்] கோபால் பத்தர் நாராயணசாமி நாயுடு முத்துக் கண்டியர் க பழனிசாமி ரகுநாதன் ஆகிய கனவான்களும் உள்ளூர் வெளியூர் வாசிகளாகிப் பலரும் வந்து குழுமியிருந்தனர்.

இவ்வூரில் எவவித இடையூறுக்கும் அஞ்சாது சுயமரியாதைத் தொண்டாற்றி பல விவாகங்களையும் பல சடங்குகளையும் நடத்தி வரும் திருவாளர் கா தாமோதரம் பிள்ளை வ ரா சிவரூப பிள்ளை இவர்களுக்கும்சுயமரியாதையைக் கடைபிடித்து பிராமணரல்லாதாரைக் கொண்டு விவாகத்தை நடத்தி வைத்த திருவாளர் கே சதாசிவம் பிள்ளை க பழனிசாமி இவர்களுக்கும சுயமரியாதை சார்பாய் எனது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுவதுடன் ஏனைய தமிழ் மக்களும் இனி தாங்கள் செய்யப் போகும் ஒவ்வொரு சுப அசுப காரியங்களையும் பார்ப்பனரை நீக்கி தமிழ் மக்களைக் கொண்டுநடத்திகொள்ளும்படிக்குசுயமரியாதை இயக்கத்தை காட்டுத் தீ போல் பரப்பி வரும் "குடி அரசை" துணைக்கொள்ளும் படிக்கு ஒவ்வொரு தமிழ் மக்களையும் வணக்கம்செய்துகேட்டுகொள்ளுகின்றேன்.

கோ. சாரங்கபாணி,


**சிங்காரக் குழந்தை அல்லது சித்திரக் கள்ளன்.**

இதில் சிங்காரக் குழந்தையின் சாமார்த்தியமும் சமயத்திற்கேற்ற நடிப்பும், வீரச் செய்கைகளும், தாசி வலையில் சிக்கிய தன் தகப்பனரை மீட்பதும், தகப்பனும் பிள்ளையும் தங்கள் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்பதும், தகப்பனர் ஆபத்தில் சிக்கி இறப்பதும், இவனை பிடிக்க முயல்வதும், அரசனை ஏமாற்றிப் பகிரங்கமாய் தன் தகப்பனுடைய ஈமக் கடன்களை முடிப்பதும், கடைசியில் அரசன் மகளையே மணம்புரிந்து அரசு புரிவதும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும். நான்கணவுக்கு எத்தேசத்து ஸ்டாம்பானாலும் அனுப்பி பெறலாம்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால தீபம் அணு 12. எக்கேள்விக்கும் எளிதில் பதிலளிக்கும் ஆச்சரியமான ஆரூட நூல். கலியின் கோலம் ஓர் பெண்மணியால் எழுதிய (துப்பறியும் நாவல்) அணு 12.

ஜானகிராம் அண்டு கம்பெனி, வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்



**ரப்பர் முத்திரைகள்.**

தங்களுடைய மேல் விலாசம் உள்பட தினசரி தேதி பதிக்கும் ஸ்டாம்பு ரூ 2-8-0. தனி ஸ்டாம்பு குஷன் உள்பட ரூ 2-0-0. 6 சுவாமிகளின் ஸ்டாம்புகள் ரூ2-8-0 வெள்ளி அரக்கு ஸீல் ரூ 2-8-0. பித்தளை அரக்கு ஸீல் ரூ 1-8-0

மேல்கண்ட ஸ்டாம்புகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10x12 பாலசுப்பிரமணியர் படம் இனமாக அனுப்பப்படும்

**M. K. SAWMY & CO**
Engravers & Rubber Stamp Makers,
Late of Spencer & Co Ltd
Sawmy Naicken Street, Mount Road, P. O MADRAS


6 ம் பக்கத் தொடர்ச்சி

ள் என்னும் இவர்கட்கு மட்டுமே வணங்கும் நம் தலை, கல்வியறிவு வாய்க்கப் பெறாதவனும் ஒன்றுக்கும் பற்றாதவனும் ஆகிய ஒரு தூர்த்தப் பார்ப்பனனுடைய அழுக்கடைந்த கால்களில் அழுத்தமுறப்பொருந்தல்வேண்டும். ஏன்? அவன் எமவீட்டுப் புரோகிதன், பண்டைக்காலத்திருந்த ஒரு பெரியாரைப் பற்றியோ ஒரு நூலைப் பற்றியோ எம்புல்லறிவிற்குச் சரியென்று தோன்றியதைச் சொல்வதாதல் எழுதுவதாதல் ஆகாது என்? போலிச்சைவரும் போலிப் புலவரும் எம்மை வாதுக் கழைப்பார்கள். யாம பண்டை நெறியினின்றும் பிறழ்ந்தோனவேம். எமது உடல் நலத்தைக் கருதித் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்ளுதல் கூடாது. என்? யாம் மிலேச்சனகி விடுவேம். உணர்ச்சி பொத்த நண்பனொருவனை அழைத்தேகி வந்து எம்மகத்தில் அவனுடனிருந்து யாம் உணவு கொள்ளுதல் கூடாது. என்? அவன் ஆதிதிராவிட குலத்தைச் சேர்ந்தவன் மேலும் செல்ல எம்மனம் இடம் கொடுக்க வில்லை. இதுசாலும் எம்பெருமானே! எம்மையும் எம் அருமைத் தாய் நாட்டினையும் என்று தான் இக்கட்டுகளினின்றும் விடுவிக்க நமக்குத திருவுள்ளமோ அறியேம்.

### நாகையைச்சேர்ந்த கூத்தார் பஜனைகட்டிட கிருஹப்பிரவேசம்.

5—2—28 காலை 10 மணிக்கு செய்யப்பட்டது. அக்காலத்து நூற்றுக்கணக்காய்முஸ்லீம் சகோதரர்களும்விஜயம் செய்திருந்தது மிகவும் பாராட்டத்தக்கது. என அக்கிராமவாசி ஒருவர் எழுதுகிறார்.

5-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

வைகளையும் வதக்கி உண்டனரென்பதே மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது.

மேலே கண்ட வேள்விச் செயல்களெல்லாம் தமிழ் மக்களால் மிகவும் அருவருத்துத் தள்ளப் பெற்றவை. இராம கதையை தமிழில் பாடி வந்த கம்பர் தமிழ் மகனானமையால் இவைகளைக் கண்டு வெறுப்படைந்து நினைந்து வருந்தி கேவலமான 'இவ்வரலாற்றைப் பாடுவதால் தம்மைத் தமிழுலகத்தார் உண்மை தெரிந்தபோது இகழ்வர் மாசும் வந்தடையும்" என்றும் புலம்பியுள்ளார். அதனால் அவர் என்ன செய்தார்' இவ்விழிவான யாக வரலாற்றை முழுவதும் மறைத்துவிட்டனர். அவர் பாடல்கள் பின்வருவன

(கலைக்கோட்டு முனிவன் தசரதனை நோக்கி)

என்றன பற்பல இனிமை கூறிநற்
குன்றுறழ் வரிசிலை குலவுத் தோளினுய்
நன்றிகொள் அரிமக நடத்த எண்ணியே
இன்றெனை அழைத்தனை யெய்புவாய்' என்
(றுன்

'உலப்பில்பல்லாண் டெலாம் உறுகண் இன்றியே
தலப்பொறை ஆற்றினன் தநயர் வந்திலர்
அலப்புநீர் உடுத்தபார் அளிக்கு மைந்தரா
நலப் புகழ் பெற இனி நல்கல் வேண்டுமால்.

என்றலும் அரசநீ இரங்கல் இவ்வுல
கொன்றுமோ உலகமீரேழு மோம்பிடும்
வன்றியன் மைந்தரை அளிக்கு மாமகம்
இன்றுநீ இயற்றுதற் கெழுக என்றிடன்
(றுன்

(பின் யாக சாலையிற் புகுந்து கலைக்கோட்டு மா முனி திவளர்க்கு ஆகுதி வழங்கினன். உடனே பூதமொன்று தீயினின்றெழுந்தது).

இவ்வாறு கம்பர் கூறும் வரலாறு வால்மீகி ராமாயணத்தில் பதினெட்டாவது சருக்கத்தில் கூறப்படுகிறது ஆதலின் பெருங்கவி கம்பர் வால்மீகி முனிவர் கூறும் அசுவமேத வரலாற்றை அறிந்திலார் எனின் அவர் கூறுவது முதலில் அவ்வாறு நினைக்கும்படி தான உள்ளது முதலின் அசுவமேதம் செய்ய என்னை அழைத்தாயா வென்று தசரதனிடம் கலைக்கோட்டுமுனி கேட்டதாகவும் அவன் அவ்வாறே கூறியதாகவும் உடனே கலைக்கோட்டுமுனி புத்திரகாமேட்டி யாகம்செய்ததாகவும் பூதம் தோன்றியதாகவுமே கம்பர் கூறுகிறார் இதனால் கம்பர் தமது நூலில் அசுவமேதத்தைப் புத்திரகாமேட்டி யென மயங்கிஎழுதியிருக்கவேண்டும் அல்லது அசுவமேதம் தமிழ்மக்களுக்கு மிகவும் அருவருப்பாக இருக்குமென்று அதனை எழுதாது மறைத்திருக்க வேண்டும்.

பூதம் தோன்றித் தந்த பாயாசத்தை தசரதன் தன்மனைவியர் மூவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தானென்று கூறிய பின்னர் கம்பர்.

"வாம்பரி வேள்வியும் மகவை நல்குவ,
தாம்பரை ஆகுதி பிறவும் அந்தணன்
ஒப்பிட முடித்த பின் உலகு காவலன்
எபபலொ டெழுந்தனன் யாருமெத்தவே"

என்று கூறுகிறார் இதனால் அசுவமேத யாகம் செய்த பின் புத்திரகாமேட்டியும் செய்தனன் தசரதன் என்பதையும அசுவ


# மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

## ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



9-ம் பதிப்பு!   வெளி வந்து விட்டது   9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)



தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால பணம் பறிக்கும்பொருட்டு அநேகால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், கொற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயின்டு விலை ரூ. 2—0—0
வி. பி. தபால் செலவு அணு 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்


மேதம் வேறு புத்திரகாமேட்டி வேறு என்பதையும் கம்பர் நன்றாக உணர்ந்தவர் என்பது புலனாகிறது. ஆகலின் கம்பர் பரிவேள்வியின் ஆபாசங்களைத் தமிழர் உணர்ந்தால் தமது கதையை மதியார் என்பதை உணர்ந்தே அதை முற்றிலும் கூறாது விடுத்தார் என்று தான் கொள்ள வேண்டியிருக்கிறது. இவருக்கு வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்துரைத்தோர் இவ்வசுவமேதயாக வரலாற்றைக் கூறாது விடுத்தனரோ என்று ஐயுறவும் இடமில்லை. ஏனெனில் அந்நோக்க முடையோர் பரிவேள்வி செய்தான் என்ற அளவில்கூட பரிவேள்விப் பெயரையே கூறியிருக்கமாட்டார்கள்.

இராமாயணக் கதையைப் படிப்போர் இதனை நன்கு கவனிக்கவேண்டும். பலன் கருதி இக்கதையைப் படிப்போர் வால்மீகி முனிவர் கூறும் உண்மைக் கதையை மறைத்து வேறு விதமாகக் கதையைமாற்றி எழுதும் கம்ப ராமாயணத்தைப் படிப்பதால் அவர்கள் விரும்பும் பலன் விளையாதென் பதை உணர்வாராக. அத்தோடு உண்மைக்குமாறான வரலாற்றைப் படித்துக் கேட்பதால் வரும் பாவத்துக்கும் ஆளாவதுண்மை. ஆகலின் கம்பராமாயணத்தை அவர்கள் படியாமல் உண்மைவரலாறாகிய வால்மீகி ராமாயணத்தைப் படிக்கக் கடவர். இச்சொல் ஆரியருள் கம்பராமாயணத்தைப் படிப்போருக்கே. தமிழரோ பிற்காலத்தில் உண்மையறியும் போது தம்மை இகழ்வரென உணர்ந்த கம்பர் தம்மவர் சிறந்த வரலாறு பல மலிந்து கிடப்பவும் அவைகளைப் பாடாமல் அந்நியராகிய ஆரியர் வரலாற்றைப் பாடியதோடு உண்மையை உரைக்காமல் பலவற்றை மறைத்தும் மாற்றியும் எழுதியிருப்பதனால் வால்மீகி ராமாயணத்தையும் படித்து உண்மையறியக் கடவர்.

ஆனால் கம்பர் ஒரு வகையில் தமது கடமையையும் மறந்தார்கள், அவர் வாழ்ந்த காலத்தில் ஆரியர் ஆதிக்கம் மிகுந்திருந்தது போலும். ஆதலாலேயே அவர்களால் வற்புறுத்தப்பட்டு அவர்கள் அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் அஞ்சியோ அல்லது அவர்களிடையும் புகழ் பெறும் அவா வினாலோ இதனை அவர் பாடியிருக்க வேண்டும். கம்பர் பரிவேள்வியையும்மகப்பேற்றுவேள்வியையும் தசரதன் செய்ததாகக் குறித்துவிட்டு பரிவேள்வியின் விவரத்தை எழுதாதிருப்பதனால் அதைப் படிப்போர்க்கு அதன் விவரத்தை அறிய ஆவல் எழும். உடன் அவர்கள் வால்மீகியைப் பார்த்துத் தெரிந்து கொள்வார்கள் என்று எண்ணியே அவர் பரி வேள்வியும் செய்யப் பெற்றது என எழுதுகிறார். தமிழ் மகனாகிய அவருக்குத் தாம பாடும் நூலில் இவ்வசுவமேத ஆபாசங்கள் இடம் பெறவேண்டாமென்று ஒருவேளை அவைகளை அவர் எழுதாது விட்டிருக்கலாம். (தொடரும்)

இறந்தவர்களை திருப்தி செய்ய

**பார்ப்பனர் வயிற்றை**

நிரப்பாதே.

4 பக்கத் தொடர்ச்சி

துவிட்டால் எனக்கு உனக்கு என்று பறந்து விடுகிறது அதுபோலவே மீதியான பழய ரவா உப்புமாவோடு தயிர் கலந்து தாளித்து இட்லியாக வார்த்து ஒரு வேக்காடு ஆவியில் வேக வைத்து எடுத்து 'ரவா இட்லி' என்று பேர் வைத்துவிட்டால் நம்மவர்கள் பரமானந்தமாய் சாப்பிட்டு விடுகிறார்கள். காலையில் விற்காத தோசைகளை மாலையில் மற்றொரு தடவை வாணலியிலிட்டு எண்ணெ விட்டு தீய்த்து எடுத்து முறுகின "ரோஸ்ட் தோசை" என்று இரண்டணாவுக்கு விற்கின்றார்கள் பழைய பலகாரங்களை மறுமுறையும் மாவில் தோய்த்து எண்ணெயில் போட்டு எடுத்துவிட்டால் சுடச்சுட பஜ்ஜி! பெரிய பெரிய போண்டா!! என்று மத்திடான குழம்புகூடச்சாப்பிடாத மகா மேதாவிகளும் சாப்பிட்டு விடுகிறார்கள். விற்காத வடைகளை புளித்த மோரில் போட்டு ஊற வைத்து தயிர் வடை என்று விற்கிறார்கள். மாதக்கணக்காய் விற்காத மிட்டாய் வகைகளையெல்லாம் சேர்த்து தூளாக்கி, தேங்காய்த் துருவல் ஏலரிசித்தூள், கடலைமாவு முதலியவை கொஞ்சம் கூட்டி அமரிக்கன் மாவில் வைத்து சுருட்டி எண்ணெயில் போட்டு புரட்டி எடுத்து அடுக்கி வைத்துவிட்டால் பூரி, சுருள் பூரி, என்று பூரிப்புடன் வாங்கி சாப்பிட்டு பூரிப்படைகிறார்கள். இப்படியேகுப்பைக்குப் போகக்கூடியபக்ஷணங்களெல்லாம் நம்மவர் குடலுக்குள் போய்விடுகிறது, சகோதர சகோதரிகளை, தாய் தந்தையரை, மனைவி மக்களை ஏமாற்றி ஒளித்த காசுபணங்கள் இப்பார்ப்பனர் பெட்டிக்குள் போய் விடுகிறது. இப்பார்ப்பன காப்பிக் கிளப்களில் ஒருவர் செலவிடும் பணத்தைக் கொண்டு வீட்டில் ஏதாவது ஒரு பலகாரம் செய்தால் வீட்டார் முழுவதும் திருப்தியாகச் சாப்பிடலாம்; உடம்பும் கெடாது. வீட்டில் இவ்வளவு சௌகரியங்கள் இருக்க கடைக்குப்போய் சாப்பிடுவது ஏனென்று கேட்கலாம். கடைக்குப் போவதற்கு காரணம் அறியாமை சுயநலம், கட்குடி வழக்கம் போன்ற ஒரு வழக்கம். காப்பிக் கடைக்கும் போவது நாகரீகமென்றும் மதிப்பென்றும் எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு தப்பெண்ணம் ஆகியவைகளே.

இவைகளெல்லாம் சேர்ந்து நம் சுயமரியாதையை இழக்கும்படி செய்துவிடுகிறது. எப்படியெனில் காப்பிக்கடையில் ஒருபக்கத்தில்சூத்திரர்கள்சாப்பிடுமிடம்என்னும்விளம்பரத்திற்குக்கீழ் உட்கார்ந்து கொண்டு அதன் அர்த்தமாகிய "வேசிமகன் அடிமை" என்னும் பழிச் சொல்லைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது மற்றொரு புறம், செருப்பு, சாணிச்சட்டி, துடைப்பம் எச்சில் தொட்டி ஆகியவைகளைப் பார்த்துக்கொண்டு சாப்பிட வேண்டியிருக்கின்றது மற்றொருபுறம் மனித சுபாவமேயில்லாத அதற்கு முற்றும் மாறான, பூணூல் போடப் பட்டிருக்கும் உருவங்களையெல்லாம் சாமி! சாமி!! என்றழைக்கவேண்டியிருக்கிறது. பல பேருடைய எச்சிலாயிருந்தாலும் பார்ப்பனப் பரிசமே பிராயச்சித்தமென்று சாப்பிட வேண்டியிருக்கிறது. மாட்டுக் கொழுப்பிலும் அய்யருடைய வேர்வையிலும் வெந்த பண்டங்களை அருவருப்பில்லாமல் சாப்பிட வேண்டியிருக்கிறது. "சாமி' நெய் ஏதோ கொஞ்சம் மட்டமாயிருக்கும் போலிருக்கிறது" என்று மெள்ளக் கேட்டு விட்டாலோ கேட்டவன் மானம் போச்சு "ஆகா நீ மகா நெய் பார்த்தவன் எப்போதாவது நெய பலகாரம் சாப்பிட்டிருந்தால் தெரியும்" என்று ஏளனம் செய்வார் அய்யர் "என்ன சாமி! கோபித்துக் கொளளுகிறீரே இப்படிக் கோபித்துக் கொண்டால் வியாபாரம் எப்படி நடக்கும்" என்று பணிவாகக் கேட்டாலும் உன்னை யாரய்யா தாம்பூலம் வைத்தழைத்தார் ஏ இஷ்டமிருந்தால் சாப்பிடு இல்லா விட்டால் எழுந்து போ" என்று யாசகம் கொடுப்பவரைப்போல் அய்யர் அதட்டுவார் வீட்டில் சாதம் கொஞ்சம் குழைந்து விட்டாலும் குழம்புக்கு கொஞ்சம் உப்போ காரமோ குறைந்து விட்டாலும் பெண்களை உதைத்து சட்டியை உடைக்கும் வீரசிங்கங்களும காப்பிக்கடைச் சாமிகளுக்குக் காசு கொடுத்து உதை படுகின்றன என்றால் இக் காப்பிக்கடை சாமிகளின பெருமையை யாரால் சொல்ல முடியும்.

சகோதரர்களே! நம்மை மனிதர்களாக, சகோதரர்களாக, சமத்துவமாக நடத்தும் நம்மவர்கள் கடையில்லையா? இல்லாவிட்டால் அது யாருடைய குற்றம்? நாம் அவர்களை ஆதரிக்காத குற்றமன்றோ? நாம் ஒரு வகுப்பாரை அதாவது நம்மை சூத்திரர்என்றழைக்கும் ஒரு வகுப்பாரை எவ்வளவு அசுசியாயிருந்தாலும் உயர்ந்தவர்கள் என்று நினைப்பதும் மற்றவர்கள் எவ்வளவு சுசியாயிருந்தாலும் தாழ்ந்தவர்கள் என்று நினைப்பதும் நாம் அடையும் சிறுமைக்கும் மற்றவர்களடையும் பெருமைக்கும் காரணமல்லவா? ஆகவே அம்மூடநம்பிக்கையை ஒழித்து நம்மைச் சமமாக மதிக்கும் நம்மவர் வியாபாரத்தை ஆதரித்தால் நாமும் நம் நாடும் சுயமரியாதை பெற்று இன்புறுவோம்.

---


## ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன கொடுக்கப்படும்.

கேட்லாக் இனும்,

## ஸ்ரீ கிருஷ்ணநந்த கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாது புஷ்டி லேகியம், அங்க கோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, கற்சுகமளிக்கும் நறுமண சந்தனதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம, பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். யந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தரை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணநந்த கௌதம பரிமள சாலை

வலங்கை மான் போஸ்டு, தஞ்சைஜில்லா


---


## டிடக்டாவ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜ். டி. மதராஸ்


---


## பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, கெம்பு, ஙாப் கலர்கள், கெட்டிச்சாயம். பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சன்னடி ,, ரூ. 4-12—0
18 மு. x 44 இஞ்ச கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சன்னடி ,, ரூ. 3-12—0

புதிய ஜவுளி கேடலாக் இனும்!

Te Madura Oriental Trading Co,.
Laxmi Cloth Store, MADURA.


---


அநேக காட்சிகளில் போன், வெள்ளி மெடல்கள் பெற்ற

## விதைகள் செடிகள்!

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.


---


இனும்! **1928** இனும்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928 ஷு காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றித்தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,

போஸ்டு முல்லாச்சேரி, மலபார்.


---


## 24 மணி நேரத்தில் குணம்.

எங்கள் டாக்டர் வி. ஜி. என் ரிங்குவாம்லோஷன் உபயோகிப்பதினால் படை, காரகப்படை எச்சத்தளிம்பு மற்ற எவ்வித சர்ம வியாதிகள் யாவும் 24மணிக்குள் நீங்கும். பெட்டி1க்கு அணா10

எஸ். ஸி. ஆர். பகவான் அண்டு கம்பெனி

மிண்டு பில்டிங், மதராஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

காரர்களால் ஒரு புறமும், பொதுஜன அமைதிக்கும் சமூக தர்மத்திற்கும் குந்தகமில்லாமலிருக்க தேசத்தின் அடிப்படையான சட்டங்களைக் கொண்டு பழைய அடிமை புகுத்தும் சாஸ்திரங்களையே சட்டமாக்க வேண்டுமென்று காங்கிரசில் முத்துரங்க முதலியாரைக்கொண்டு மற்றொரு புறமும் பிரயத்தினம் செய்கையில் ராயல் கமிஷனை அவர்கள் வரவேற்றால்தான் தங்களுக்கு நன்மையுண்டாகுமென்று அனுபோகத்தை ஒட்டித் தீர்மானம் பண்ணினதை பச்சாத்தாபமுடைய ஒவ்வொரு மனிதனும் ஒத்துக்கொள்ள வேண்டும். ஸ்ரீமான்கள் முத்துரங்கமுதலியார், சத்தியமூர்த்தி அய்யர், எ. ரெங்கசாமி அய்யங்கார் இவர்கள் அறிக்கைப் பத்திரமும் பிரசங்கமும் ஆதிதிராவிடர்களுக்குக் காங்கிரசுதான் நன்மை செய்யுமென்கின்றனவே. தீண்டாமை போக்க வேண்டுமென்று காங்கிரசிலிருந்ததைக் காங்கிரசே பூதமாக வந்து விழுங்கிவிட்டதா? அதில் தன்னலம் கருதும் மனிதர்கள் அழித்து விட்டார்களா? இவர்கள் மூன்று பேர்களும் தீண்டாமையைப் போக்க இதற்காகத் தனியாகச் செய்த பிரசங்க மேதாவதுண்டா? பொதுவிடத்தில் இவர்களைச் சேர்க்காமல் பண்ணும் அக்கிரமத்திற்கு இவர்கள் பண்ணின சகாயமென்ன? இந்த அறிக்கையை பத்தி பத்தியாய் எழுதுவதுபோல் ஆதிதிராவிடர்களுக்குச் செய்யும் அநீதிகளை எடுத்து "சுதேசமித்திரன்" பத்தி பத்தியாக எழுதவில்லையே! வருணாசிரமத்திற்கு வாயை மூடிக்கொண்டிருந்து இப்பொழுது பகிஷ்காரத்திற்கு வக்கீலையும், பணக்காரனையும், உத்தியோகஸ்தனையும், தங்களையும் லீவில் விட்டுவிட்டு கூலிக்காரன், பாக்கு வெற்றிலைக்காரன், பலசரக்குக் கடைக்காரன் இவர்கள் பிழைப்பில் மண்ணைப்போட வீரம்பேசுகிறதே! கொள்ளையின் கொடுமையும், வீரத்தின் பெருமையும் சந்திக்கமாட்டா: உங்கள் தந்திர புத்தியினால் அப்படிப்பட்ட சந்திகள் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் தெய்வத்தின் தோரணையில் அந்த ரஸ்தா சரியான சோதனையில் அங்கீகாரம் செய்யப்படவில்லை. உடனே கிடைக்கும் லாபமே பெரிதென்று எந்த நாகரீகமும் ஒத்துக் கொண்டதில்லை. இன்னொருவரிடமிருந்து நன்மையடைய வேண்டுமென்கிற எண்ணத்தைப் போன்றே நம்மில் தாழ்ந்தவர்கட்கு நம்மால் சில கொடுக்கப்பட வேண்டுமென்று நினைக்காத வீரமும் புத்தியும் எங்கும் பெருமையடையாது. ஒரு வெள்ளைக்காரன் இந்த ஊருக்கு வந்தால் பொட்ளர், மேட்டி, குசினி, தண்ணீர்க்காரன், தோட்டக்காரன், நாய்க்காரன், பாய், ஆயாள் முதலிய வேலைக்காரர்களான பத்து ஆதிதிராவிடக் குடும்பங்கள் பிழைக்கின்றன. காங்கிரசைக் காட்டி உத்தியோகம் அனுபவிக்கும் படித்த கூட்டம் பறந்து போகையில் வெள்ளைக்காரனை அண்டி ஆதிதிராவிடர்கள் பிழைக்க நினைத்ததில் தப்பு என்ன? "நாமும் ஒன்றும் செய்யோம், அவர்களுக்கு செய்கிறவர்களையும் தடுப்போம்" என்பதுதான் தப்பு. வெள்ளைக்காரர்களால் உத்தியோகமடைந்து பணமும் பெருமையும் அடைந்த குடும்பங்களும் உயர்ந்த ஜாதியில் சரித்திரக் கிரமமாக அநேக மிருக்கின்றன.

---


சிரிப்பு! ஓயா சிரிப்பு!!

## முத்து மாமா.

இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் எப்போதும் சிரிப்பீர்கள் வேண்டுவோர் நாலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

S. C. R. பகவான் அண்டு கம்பெனி

மிண்டு பில்டிங்கு, மதராஸ்.



## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரெஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

கி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதிராஸ்



## மின்சார ரசம்.

### சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம். அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! கேட்லாக் இனாம்.
உங்களை ஆச்சரியமுறச் செய்யும்! இன்றைக்கே எழுதுங்கள்.
ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.



## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை நெம்பர்களில் $2\frac{1}{2}$ முழம அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்கரையும் ஜரிகை முந்தானியுள்ள சேலை ரகங்களும ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம, கோயமுத்தூர்.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த தேகாவஸ்தை நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் எமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபால் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,

பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.



# தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்துவிட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. | 1. | ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை | 1 ரூ. | 9—8—0 |
| நெ. | 2. | பாரிஸ் பூக்கரைப் போர்வை | 1 ரூ. | 10—8—0 |
| நெ. | 3. | ஷை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 ரூ. | 16—0—0 |
| நெ. | 4. | காஷ்மீர் கை நெசவுப் போர்வை | 1 ரூ. | 12—0—0 |
| நெ. | 5. | ஜெர்மன் மேக்வர்ணப் போர்வை | 1 ரூ. | 15—0—0 |

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.



# ஆநந்த குணபோதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்த சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலேயாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.



சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்து மாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



முன் விலை ரூ. 14 இப்போழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்

கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE

George Town, Madras



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{4}$"x $2\frac{1}{2}$" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,

பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# 1928-ம் வருஷத்திய

# இந்துசமயக் காலண்டர்.

இது தளதளவென ஒளிரும் உயர்ந்த ஆர்ட் பேப்பரில் 20X30 அங்குல அளவில் சிறந்த இரண்டு வர்ணங்களினால் அச்சிடப் பெற்றிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் தேவதா தரிசனம் செய்வதற்கு இசைந்த வகையில் அமைக்கப்பட்டது.

இதில் அடங்கியுள்ள படங்கள்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

ஒவ்வொரு படத்தின் காட்சியும் கண்ணைக் கவரும்!
கருத்தைக் கொள்ளை கொள்ளும்!!
மனதை உருக்கும்!!! பெரு மகிழ்வை ஊட்டும்!!!!

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

5௲5, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.